26.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காய்கறி விலை சரிவு: இன்று தடபுடல் விருந்து தான்!



கோயம்பேடு: ஆயுதபூஜையை ஒட்டி, கோயம்பேடு சந்தையில், பழங்கள் மற்றும் பூக்களின் விலை உயர்ந்துள்ளது. ஆனால், காய்கறி விலை குறைந்துள்ளது. அதனால், இன்று சென்னை வாசிகள், அவியல், பொரியல்,

பச்சடி வைத்து, விருந்து சாப்பாடு சாப்பிடலாம்.ஆயுத பூஜை பண்டிகையை ஒட்டி, கோயம்பேடு சந்தைக்கு கடந்த வாரம் முதலே, காய்கறிகள், பூஜைக்கு தேவையான பொருட்களின் வரத்து அதிகரித்தது. பூஜைக்கு தேவையான தேங்காய், பெருமளவில் பொள்ளாச்சி, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் இருந்து கோயம்பேட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

* கடந்த வாரம், உடு ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு தேங்காய், நேற்று, 15

முதல் உ0 ரூபாய் வரை விற்பனையானது
* வாழை மரம், ஒரு ஜோடி 60 ரூபாய்க்கு விற்பனையானது
* பூசணிக்காய் கிலோ 7 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது
* அதேநேரம், ஆப்பிள், ஆரஞ்சு, சாத்துக்குடி பழங்களின் விலை விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ, 100 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஆப்பிள், தற்போது கிலோ, 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நேற்று வரை, கிலோ, 25 ரூபாய்க்கு விற்கப்பட்ட சாத்துக்குடி, தற்போது, ச5 ரூபாயாகி விட்டது. அதேபோல், ஆரஞ்சு, மாதுளை, அன்னாசிப்பழங்களின் விலையும், கிலோவிற்கு, 10 முதல் 15 ரூபாய் உயர்ந்துள்ளது

மேலும், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து பூக்களின் வரத்து குறைந்ததால், அவற்றின் விலையும் உயர்ந்துள்ளது. இதுகுறித்து, வாடிக்கையாளர்கள் கூறியதாவது:வழக்கமாக, பண்டிகை காலங்களில், காய்கறி விலை அதிகமாக இருக்கும். தற்போது நேர்மாறாக இருக்கிறது. ஆனால் பூஜைக்கு தேவையான ஆப்பிள், சாத்துக்குடி போன்ற பழங்களின் விலை தற்போது அதிகரித்திருப்பது, நடுத்தர மக்களை வெகுவாக பாதிக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ஆயுதபூஜை விற்பனையை கருத்தில் கொண்டு, இந்த முறை கூடுதலாக பழவகைகளை இறக்குமதி செய்துள்ளோம். இந்த ஆண்டு, விற்பனை அதிகரிக்கும் என, நம்புகிறோம். பழங்களின் வரத்து அதிகரிக்கும் போது, விலை குறைந்து விடும். அருள், கோயம்பேடு காய் கனி சங்க செயலர்

**பழங்கள் விலை**

ஆப்பிள் ரூ.90 முதல் ரூ.140

மாதுளை ரூ.140

சாத்துக்குடி ரூ.45

ஆரஞ்சு ரூ. 40

ஆரஞ்சு ெவளிநாட்டு ரகம் ரூ.80

கொய்யாப்பழம் ரூ.45

சப்போட்டா ரூ.50

அன்னாசி பழம் ரூ.50

வாழைப்பழம் (தார்) ரூ.250 முதல் ரூ.350

பூக்கள் விலை

மல்லி ரூ.500

முல்லை ரூ.180

ஜாதிமல்லி ரூ.200

ரோஜா ரூ.150

சம்பங்கி ரூ.200

செண்டு மல்லி ரூ.90

அரளி ரூ.300

சம்பங்கி ரூ.150

**காய்கறி விலை நிலவரம்**

விலை நிலவரம் ரூபாய் / கிலோ

பீன்ஸ்- 25 முதல் 35 வரை

கேரட்- 30

ஊட்டி கேரட் 40

நூக்கல்- 13

சவ்சவ்- 15

பீட்ரூட்- 18

வெங்காயம் 20 முதல் 40 வரை

சாம்பார் வெங்காயம்- 30 முதல் 45

அவரைக்காய்- 40

வெண்டைக்காய்- 15

கொத்தவரங்காய்- 17

பாகற்காய்- 25

முருங்கைக்காய்- 25 முதல் 35 வரை

முள்ளங்கி- 17

சுரைக்காய்- 10

புடலங்காய்- 14

கத்தரிக்காய்- 15

உருளைக்கிழங்கு- 14

தக்காளி 20

சேனைக்கிழங்கு 17

சேப்பக்கிழங்கு 25

வாழைக்காய் (காய் ஒன்று) 5

தேங்காய் (காய் ஒன்று) 15 முதல் 20

பூசணிக்காய் 7

**தர்பூசணி விதைக்கு காத்திருக்கும் விவசாயிகள்**

காஞ்சிபுரம்:ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், இந்தாண்டிலாவது தர்பூசணி விதை கிடைக்குமா என, விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மூலம், ஒவ்வொரு ஆண்டும், தோட்டக்கலை துறை சார்பாக, விவசாயிகளுக்கு காய்கனிகளின் விதைகள் மானியத்தில் வழங்கப்படும்.அவ்வாறு, கடந்த ஆண்டில், தமிழகம் முழுதும் காய்கனி விதைகள் மானியத்தில் வழங்கப்படாததால், பெரும்பாலான விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.இதில் குறிப்பாக, அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் விளைவிக்க துவங்கும் தர்பூசணி, மார்ச் மாதம் அறுவடை செய்து, கோடை காலத்தில் விற்பனை செய்ய ஏதுவாக இருக்கும்.இதனால், கடந்த ஆண்டில், தர்பூசணி விதை கிடைக்காமல், அதிக விலை கொடுத்து, வெளிச்சந்தையில் வாங்கி விளைவித்தனர்.

இந்த நிலையில் நடப்பாண்டிலாவது, அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் விளைவிக்க துவங்கினால் தான், பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தர்பூசணியை அறுவடை செய்ய முடியும்.இதுவரை, தர்பூசணி விதை மானியத்தில் வழங்கப்படவில்லை எனவும், விரைவில் வழங்க வேண்டும் என, கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து, தோட்டக்கலை துறை உதவி

இயக்குனர் ஒருவர் கூறுகையில், "ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் நடப்பாண்டில், மானிய விலையில் தர்பூசணி விதை விரைவில் வழங்கப்படும். திட்டத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். திட்டம் வந்த உடன், விதைகள் வழங்கப்படும்," என்றார்.

**நாட்டு சவுக்குக்கு பதிலாக கலப்பின ரகத்திற்கு மாற்றம்: இரட்டிப்பு லாபத்தால் விவசாயிகள் ஆர்வம்**

திருத்தணி:இரட்டிப்பு லாபம் கிடைப்பதாலும், ஒப்பந்ததாரர்களே, நாற்றுக்களை வயல்வெளிக்கு கொண்டு வந்து, அவர்களது கூலியாட்கள் மூலமாக, குழி தோண்டி நட்டு

கொடுப்பதாலும், நாட்டு சவுக்குக்கு மாற்றாக, கலப்பின ரக சவுக்கு நடுவதில், விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, திருவாலங்காடு, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் கடம்பத்துார் ஆகிய ஒன்றியங்களில், 5,000த்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நாட்டு ரக சவுக்கு பயிரிட்டு வந்தனர்.

அனைத்தும் துளிர்ப்பதால்...இந்த நாட்டு ரக சவுக்கு நாற்றுகளை, புதுச்சேரியிலிருந்து வாங்கி வந்து, நெல் நடவு செய்வது போல், கையால் நடவு செய்து வந்தனர்.

இதில், ஏக்கருக்கு 4,500 முதல், 5,000 கன்றுகள் நடப்பட்டன. இவற்றில், 30 சதவீத கன்றுகள் துளிர்க்காமல் காய்ந்து விடுகின்றன.

குறைந்தபட்சம், நான்கரை ஆண்டுகள் வரை பராமரித்தால் தான், சவுக்கு கன்றுகள் மரமாகி, வெட்டும் பருவத்தை அடையும். அப்போது தான், ஏக்கருக்கு, 2 முதல் 2.50 லட்சம் ரூபாய் வரை விலை கிடைக்கும். இதற்கு ஏக்கருக்கு, 80 ஆயிரம் முதல் 1 லட்சம் ரூபாய் வரை

செலவாகும்.சவுக்கு மரங்கள், அரசியல் கட்சி கூட்டங்கள், கோவில் திருவிழாக்கள் மற்றும் கட்டுமான பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு தேவைப்படுவதால், ஆண்டு முழுவதும் சவுக்கு மரங்களுக்கு கிராக்கி இருக்கும்.

ஆறு மாதம் வரை, சவுக்கு பயிரை களைகள் எடுத்து பராமரிக்க வேண்டும். மீதமுள்ள நாட்களில், தேவைப்படும்போது, தண்ணீர் பாய்ச்சினால் போதும். ஒரே நேரத்தில், கணிசமான தொகை கிடைப்பதால், விவசாயி கள் ஆர்வத்துடன் இதை சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கரூர், புதுச்சேரி, ஆந்திர மாநில வங்கோல், சித்துார் ஆகிய பகுதிகளில், அதிகளவில் விற்கப்படும், கலப்பின ரக சவுக்கு, தற்போது திருவள்ளூர் மாவட்ட விவசாயி களிடையே அறிமுகமாகி உள்ளது. இந்த கலப்பின ரக சவுக்கு, ஏக்கருக்கு, 3,500 கன்றுகள் நடப்படுகின்றன. இவற்றில், ஒரு சதவீதம் கூட சேதாரம் ஆகாமல், அனைத்தும் துளிர்விட்டு வளர்கின்றன. மூன்றரை ஆண்டுகளில், வெட்டுவதற்கு தயாராகின்றன. மேலும், ஏக்கருக்கு அதிகபட்சம், 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே பயிரிட செலவாகும். குறைந்தபட்சம், 3.50 லட்சம் முதல், 4.50 லட்சம் ரூபாய் வரை விலை கிடைக்கும் என, கூறப்படுகிறது.

இரட்டிப்பு லாபம் கிடைப்பதால், நாட்டு ரகத்திற்கு மாற்றாக, கலப்பின ரக சவுக்கை பயிரிடுவதில், விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.இந்த கலப்பின ரகத்தை பயிரிட, நாற்று குழி தோண்டி, நடவு செய்யும் முறையை விவசாயிகள் கையாளுகின்றனர். குழி தட்டுகளில், தென்னை நாற்று கழிவுகளை நிரப்பி, சவுக்கு நாற்றை வளர்க்கின்றனர்.வளர்ந்த நாற்றுக்களை, 1 மீட்டர் இடைவெளிக்கு, 0.5 அடி ஆழத்தில் குழி தோண்டி நடுகின்றனர்.

இதுகுறித்து, சவுக்கு பயிரிடும் விவசாயிகள் கூறியதாவது: நாட்டு சவுக்கு நாற்றுக்களை, வெளியூர்களுக்கு சென்று வாங்கி, ரயில் மூலம் கடும் சிரமப்பட்டு கொண்டு வந்தோம். கொண்டு வந்த நாற்றுக்களை நட, கூலியாட்கள் கிடைக்காமல், உரிய நேரத்திற்குள் நடவு செய்ய முடியாமல், நாற்றுகள் சேதம் அடைந்தன. ஒப்பந்ததாரர்களே... தற்போது, அறிமுகமாகியுள்ள கலப்பின ரக சவுக்கு நாற்றுகளை, வாங்கும் ஒப்பந்ததாரர்களே, வயல்வெளிக்கு கொண்டு வந்து, அவர்களது கூலியாட்கள் மூலமாக, குழி தோண்டி, நடவு செய்துவிட்டு செல்கின்றனர். நாங்கள் கூலியாட்களை தேடி அலைய வேண்டியதில்லை. ஆயிரம் நாற்றுக்கு, 450 ரூபாய் கொடுத்தால் போதும். இந்த ரக சவுக்கு நாற்றுகள், குழி தோண்டி தண்ணீர் ஊற்றி வைப்பதால், ஒன்றுகூட சேதாரம் ஆவதில்லை. மேலும், இரட்டிப்பு லாபம் கிடைப்பதால், இதை பயிரிடுவதில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு அவர் கூறினர்.

## 2 நாட்களுக்கு கனமழை

சென்னை:'தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும்' என, அறிவிக்கப்பட்டுள்ளது.தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நேற்று பரவலாக

மழை பெய்தது. 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக, நெல்லையில் - 13 செ.மீ., துாத்துக்குடியில் - 7, ராமநாதபுரம், கன்னியாகுமரியில் தலா - 5 செ.மீ., மழை பதிவானது.

'அடுத்த இரண்டு நாட்களுக்கு தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்

சேரியின் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

'மற்ற மாவட்டங்களில், ஒரு சில இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகரில் இரவு நேரத்தில் மழை பெய்யலாம்' என, வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## கடலோர மாவட்டங்களில் 2 நாட்களுக்கு கனமழை

சென்னை : தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நேற்று பரவலாக மழை பெய்தது. 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக, நெல்லையில் - 13 செ.மீ., துாத்துக்குடியில் - 7, ராமநாதபுரம், கன்னியாகுமரியில் தலா- 5 செ.மீ., மழை பதிவானது.'அடுத்த இரண்டு நாட்களுக்கு தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்யக்கூடும். மற்ற மாவட்டங்களில், ஒரு சில இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகரில் இரவு நேரத்தில் மழை பெய்யலாம்' என, சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## உழவர் மன்றம் துவக்க விழா

விழுப்புரம்: முகையூர் ஒன்றியம் ஆயந்தூர், ஆற்காடு ஊராட்சிகளில் உழவர் மன்ற துவக்க விழா நடந்தது. கேர் நிறுவனம் சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு, நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் விக்ரமன் தலைமை தாங்கினார். ஆயந்தூர், ஆற்காடு ஆகிய ஊராட்சிகளில் உழவர் மன்ற பெயர் பலகையை, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராஜேந்திரன் திறந்து வைத்து, வங்கி சேவையை உழவர்கள் முழுமையாக பயன்படுத்தி பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமென கூறினார். முன்னதாக கேர் நிறுவன செயலாளர் சிவலிங்கம் வரவேற்றார்.

சென்னகுணம் இந்தியன் வங்கி கிளை மேலாளர் ஜான்கிஷோர், பூமி கண்காணிப்பகம் ராதாகிருஷ்ணன், உழவர் மன்ற தலைவர் திவ்யநாதன், செயலாளர் ராஜேஸ்வரி, பொருளாளர் இளவரசி, கேர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சந்திரன், ஆற்காடு உழவர் மன்ற தலைவர் விட்டல், முகையூர் தலைவர் தாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். மன்ற செயலாளர் ஜெயகுமார் நன்றி கூறினார்.

**விதைகள், உரங்கள், பூச்சி மருந்து இருப்பு வைக்க கலெக்டர் உத்தரவு**

கிருஷ்ணகிரி: பருவ மழை துவங்குவதால், விவசாயத்திற்கு தேவையான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றை போதிய அளவு இருப்பு வைக்க வேண்டும் என, அதிகாரிகளுக்கு, கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பங்கேற்ற சிறப்பு ஆய்வுக்கூட்டம் நடந்தது. கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்து பேசியதாவது: தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், தேசிய நீடித்த வேளாண்மை இயக்கம், விதை கிராம திட்டம் மற்றும் ஆத்மா திட்டம் ஆகிய திட்டங்களை ஆய்வு செய்ததில், முழு சாதனை

அடையவில்லை. அதனால் அனைத்து திட்டத்தையும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும். வேளாண் இயந்திரங்களான பவர் டில்லர், டிராக்டர், ரோட்டவேட்டர் ஆகியவற்றிற்கு உரிய பயனாளிகளை தேர்வு செய்து மின்னணுமுறை மூலம் விவசாயிக்கு நேரடியாக வங்கி மூலம் மானியத்தை வழங்க வேண்டும். மேலும் பருவ மழை தொடங்கியுள்ளதால் விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகளை ஆகியவற்றை போதிய அளவு இருப்பு வைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். வேளாண்மை இணை இயக்குனர் சபாநடேசன் உட்பட அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

### 3 ஆயிரம் ஏக்கர் பாசனம்: நிலமின்றி காத்திருக்கும் திட்டம்

சத்தியமங்கலம்: சத்தி அருகே, 88 ஏக்கர் நிலம் கிடைக்காத காரணத்தினால், 15 ஆண்டுகளாக நீர்தேக்க திட்டம் காத்திருக்கிறது. இந்த நிலம் கிடைத்தால், மூவாயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். ஆண்டுக்கு, ஐந்து டி.எம்.சி., மழை நீர் வீணாவதும் தடுக்கப்படும்.

சத்தியமங்கலம் அருகே கடம்பூர் மலைப்பகுதியின் மேற்கு பகுதியில் உள்ள, கம்பத்ராயன்கிரி மலைப்பகுதியில் இருந்து வரும், மழை நீரை சேமிக்க, புளியங்கோம்பை நீர்தேக்க திட்டம், கடந்த 1999ல் வகுக்கப்பட்டது. திட்டத்தை செயல்படுத்த, ரூ.8 கோடி செலவாகும் என கூறப்பட்ட நிலையில், வேகம் குறைந்தது. கடந்த, தி.மு.க., ஆட்சியில் எம்.எல்.ஏ.. தர்மலிங்கம், தனிக்கவனம் செலுத்தினார். அப்போது, திட்ட மதிப்பு, ரூ.13 கோடியாக எகிறியது. திட்டத்தை நிறைவேற்ற, அரசுக்கு சொந்தமான இடம் குறைவாக உள்ளது. இதனால், அருகில் உள்ள பட்டா நிலம் தேவை எனவும் அதிகாரிகள் கூறினர். நிலத்தின் உரிமையாளர் கந்தசாமியிடம், பேச்சு நடத்தியதில், சாதகமான சூழ்நிலை வரவில்லை. இதனால், திட்டம் மீண்டும் கிடப்புக்கு போனது. தற்போது எம்.எல்.ஏ., சுந்தரம், இதற்காக முழு முயற்சி எடுத்து, மீண்டும் பொதுப்பணித்துறை

அதிகாரிகளை வைத்து, கடந்த 3 மாதங்களுக்கு முன், சர்வே செய்தார். இதில், 12 மீட்டர் உயரம் வரை தண்ணீர் தேக்கி வைக்கலாம் எனவும், அணை கட்ட 100 ஏக்கர் நிலம் தேவைப்படும் என்றும் அதிகாரிகள் திட்டவரைவு தயார் செய்தனர். ஆனால் அரசுக்கு சொந்தமான நிலம் 20 ஏக்கர் மட்டுமே உள்ளது. விவசாயி கந்தசாமியிடம் உள்ள, 88 ஏக்கர் நிலத்தை கொடுத்தால் மட்டுமே திட்டத்தை நிறைவேற்ற முடியும் என அதிகாரிகள் கைவிரித்து விட்டனர். திட்டம் நிறைவேறினால் இப்பகுதியை சேர்ந்த, மூவாயிரம் ஏக்கர் நிலம், நேரடியாக பாசனம் பெறும். இதுதவிர, நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால், 10 ஆயிரம் ஏக்கர், விவசாய நிலங்கள் மறைமுகமாக பயன்பெறும் என்பதும் குறிப்பிடதக்கது. திட்டத்துக்கு தேவையான நிலம் வைத்துள்ள அரியப்பம்பாளையத்தை சேர்ந்த, விவசாயி கந்தசாமியிடம் பேசியபோது, 'நில எடுப்பு சட்ட விதிகளின்படி, அரசு என் நிலத்தை எடுத்துக் கொள்ளட்டும். எங்களுக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை' என்று சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

## மானியத்தில் வழங்க 30,000 தென்னங்கன்று தயார்

ஈரோடு: தமிழகத்தில், தென்னை மரங்கள் அதிகம் உள்ள பகுதியில், ஈரோடு மாவட்டம் முக்கிய இடம் வகிக்கிறது. மாவட்டத்தில், 13 ஆயிரம் ஏக்கரில், தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தென்னை வளர்ப்பை ஊக்குவிக்க, அரசு சார்பில் மானிய விலையில் தென்னங்கன்று வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டுக்கு, ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, 30 ஆயிரம் தென்னங்கன்று தயாராக உள்ளது. இதுகுறித்து, ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் திருமூர்த்தி கூறியதாவது: 15 ஆயிரம் நெட்டை தென்னங்கன்று, 15 ஆயிரம் நெட்டை-குட்டை தென்னங்கன்று, இப்போது தயார் நிலையில் உள்ளது. கடந்தாண்டு, நெட்டை கன்றுக்கு, ரூ.7.50, நெட்டை - குட்டை

கன்றுக்கு, ரூ.15 மானியமாக வழங்கப்பட்டது. நடப்பாண்டு, ஒவ்வொரு நெட்டை கன்றும், 15 ரூபாய் மானியத்திலும், நெட்டை - குட்டை கன்று, 25 ரூபாய் மானியத்திலும் வழங்கப்படுகிறது. இதுவரை, ஏழாயிரம் கன்று தரப்பட்டுள்ளது. அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில், இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தேயிலை விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம்

குன்னூர்: குன்னூர் தேயிலை வாரியம் சார்பில், கொல்லிமலை ஓரநள்ளி கிராமத்தில் தேயிலை விவசாயிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. வாரிய கூடுதல் செயல் இயக்குனர் பகலவன் வரவேற்றார். தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராஜ் தலைமை வகித்து, தேயிலையின் முக்கியத்துவம் குறித்து பேசினார். குறிப்பாக, 'தேயிலை விவசாயிகள் தரமான தேயிலையை பறிக்க வேண்டும்; 'சில்வர் டீ' தயாரிக்க அதிக ஆர்வம் காட்ட வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டன. முகாமில், தேயிலைவாரிய வளர்ச்சி அலுவலர் செல்வி பிரபா, உபாசி வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் ராமமூர்த்தி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் செல்வராஜ் உட்பட பலர் பேசினர். ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

## காபி மகசூல் அதிகரிப்பு விவசாயிகள் பூரிப்பு

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியில் தேயிலை தோட்டங்களுக்கு நடுவே ஊடுப்பயிராக பயிரிட்டுள்ள காபி அறுவடைக்கு தயாராகி வருகிறது.

தேயிலை தோட்டங்கள் நிறைந்த கோத்தகிரி பகுதியில், மாற்றுப்பயிராக, காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில், சமீபக் காலமாக, தேயிலை தோட்டங்களுக்கு நடுவே, ஊடுப்பயிராக காபி பயிரிட்டுள்ளனர். கோத்தகிரி குஞ்சப்பனை, மாமரம், வக்கனமரம், செம்மனாரை உள்ளிட்ட சமவெளி பகுதியை ஒட்டிய, கிராமங்களில்,

ஆதிவாசி மக்கள் உட்பட விவசாயிகள் அதிகளவில் காபி சாகுபடி மேற்கொண்டுள்ளனர். செடிகளில் காபி, கொத்து கொத்தாக காய்த்துள்ளன. ஓரிரு வாரங்களில், அறுவடைக்கு தயாராகும் காபியை, விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

விவசாயி ராமன் கூறுகையில்,'கடந்த காலங்களில், காபி விவசாய வருமானத்தை நாங்கள் பெரிதாக நினைத்ததில்லை. தேயிலை விலை வீழ்ச்சிக்குப்பின்பு, காபி உற்பத்தியை அதிகரித்து, வருமானத்தை பெருக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு பயன் கிடைத்தது' என்றார்.

## சம்பா சாகுபடியில் விவசாயிகள் மும்மரம்: பருவமழை கை கொடுக்கும் என நம்பிக்கை

கரூர்: மேட்டூர் அணை நீர்மட்டம் குறைந்த போதும், பருவமழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் சம்பா சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேட்டூர் அணை மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, கடலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்நிலையில், தென்மேற்கு பருவமழை காரணமாக காவிரி நீர் பிடிப்பு பகுதியில் ஓரளவு பெய்த மழையால், கர்நாடக அணையிலிருந்து உபரிநீர் மேட்டூர் அணைக்கு திறந்த விடப்பட்டது. இதையடுத்து அணையின் நீர்மட்டம், 94 அடி இருந்த நிலையில் ஆகஸ்ட், 9ம் தேதி காவிரி பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன்படி, கரூர் மாவட்டத்தில் குளித்தலை, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் ஆகிய காவிரி கரை பகுதிகளில் வாய்க்கால் மற்றும் கிணற்று பாசனத்தை கொண்டு சம்பா பருவ நெல்

சாகுபடிக்கு நாற்று விடப்பட்டு வருகிறது. மிகவும் தாமதமாக துவங்கிய போது, பருவமழையை நம்பி விவசாயிகள் சாகுபடி பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து, வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது: மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி.மீ., என்றாலும், அக்டோபர் மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசாரி மழை, 493.70 மி.மீ., விட, இப்போது 531.13 மி.மீ., மழை கூடுதலாக பெய்துள்ளது. இந்த மழை தொடரும் என்ற நம்பிக்கையில் சிறுதானியப்பயிர்கள், 6,117 ஹெக்டரும், பயிறு வகை பயிர்கள், 2,082 ஹெக்டரும், எண்ணெய் வித்து பயிர்கள், 3,109 ஹெக்டரும் மற்றும் கரும்பு, 2,195 ஹெக்டரும் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். மேலும், சம்பா நெல் சாகுபடி செப்., மாதம் முதல் வாரத்தில் விவசாயிகள் துவங்குவது வழக்கமாகும். ஆனால், மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால் சாகுபடி துவங்க தயக்கம் காட்டி வந்தனர். இந்நிலையில், பருவமழை ஏமாற்றாது என்ற எண்ணத்தில், தற்போது, 1,313 ஹெக்டர் நடவு பணியை மேற்கொண்டு உள்ளனர். இந்த மாதத்துக்குள், 7,000 ஹெக்டேர் சம்பா நெல் சாகுபடிக்கு எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமராவதி ஆற்று பாசன பகுதிகளில், அரவக்குறிச்சி, க.பரமத்தி சுற்று வட்டார பகுதிகளில் இனிமேல் தான் நெல் சாகுபடியை நடக்கும். இருப்பினும், இந்த ஆண்டு சாகுபடி பரப்பளவு குறையும் அபாயம் உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**வனப்பகுதிகளில் புலிகளுக்கு பாதுகாப்பு அவசியம்!**

திண்டுக்கல் : "நீர்வளத்தை காப்பாற்ற புலிகளை பாதுகாக்க வேண்டும்' என, வன உயிரின வார இறுதி தினத்தில் மாவட்ட வன அலுவர் வெங்கடேஷ் தெரிவித்தார்.

வனத்துறை சார்பில், வனம், வனவிலங்குகளை காப்பாற்ற இந்தியாவில் ஆண்டுதோறும் அக்.,2 முதல் 8 வரை வன உயிரின வாரம்

கொண்டாடப்படுகிறது. இதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் வனம், வனவிலங்குகள் மிகவும் அவசியம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தப்படுகிறது. பொழுது போக்கிற்காக வனவிலங்குகளை மனிதன் வேட்டையாடியதன் விளைவு இன்று பெரும்பாலான வன உயிரினங்கள் அருகிவிட்டன. உதாரணத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு முன் லட்சத்திற்கும் அதிகமாக இந்தியக் காடுகளில் வாழ்ந்த புலிகள், தற்போது வேட்டையாடுதலால் குறைந்துவிட்டது.

கொடைக்கானல் மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் கூறியதாவது: ஒரு காட்டில் புலிகள் வாழ்ந்தால்தான் மற்ற உயிரினங்களும் வாழும் என்ற உண்மை பலருக்கு தெரியாது. இன்று புலிகளின் வாழ்விடம் மிகவும் சுருங்கிவிட்டது என்பது ஒரு வேதனையான உண்மை. நாட்டில் புலிகள் வசிக்கும் காடுகளில் தான் மிக முக்கியமான நதிகள் உற்பத்தியாகின்றன. எனவே நம்நாட்டின் நீர்வளம் புலிகள் மற்றும் அதன் வாழ்விடங்களை பாதுகாத்தலில்தான் உள்ளது, என்பதை அனைவரும் அறிய வேண்டும்.

வளம் பெருக்கும் யானைகள்: ஒரு நல்ல காடு என்றால் அங்கு யானைகள் வசிக்க வேண்டும். ஏனெனில் யானைகள் காட்டில் ஓராண்டில் 300 முதல் 350 கி.மீ., தூரம் நடந்து சென்று வரக்கூடியது. யானைகளின் எச்சம் மூலம் 16 வகை முக்கிய தாவரங்கள் காடுகளில் பரவுகிறது. எனவே யானை, "கீ ஸ்டோன் ஸ்பீசீஸ்' என அழைக்கப்படுகிறது.

தாவர உற்பத்தியில் குரங்கு: சிங்கவால் குரங்கு உலகத்திலேயே எங்கும் இல்லாத, மேற்கு தொடர்ச்சி பகுதிகளில் மட்டுமே காணப்படும் ஒரு அரிய வகை விலங்கு. இந்த குரங்குகள் 200 வகையான தாவரங்களை உண்டு உயிர் வாழ்கின்றன. இவற்றின் எச்சத்தால் 200 வகை தாவரங்கள் காடுகளில் உற்பத்தியாகின்றன. இது தவிர மரங்கள் அனைத்தும் அதிக மழை பொழியும் காடுகளில் காணக்கூடியது. எனவே காடுகளில் அதிக மழைப் பொழிவு ஏற்பட இந்த தாவரங்கள் எவ்வளவு முக்கியமோ,

அவ்வளவு முக்கியம் சிங்கவால் குரங்குகளும். எனவே சிங்கவால் குரங்குகளை நாம் அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும். அடுத்து, வண்ணத்துப்பூச்சிகள் இல்லாமல் வனங்கள் இல்லை என்றே கூறலாம். இவைதான் காடுகளில் பல்லுயிரினப் பெருக்கத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. வனவிலங்குகள் நாட்டின் விலைமதிப்பற்ற செல்வம். அவற்றால் சுற்றுலாத்துறையும் வளர்ச்சி அடைகிறது.

பாதுகாப்பு அவசியம்: மக்கள் தொகை பெருக்கம், வனங்கள், வன உயிரினங்கள் அழிக்கப்படுவதால் பூமியின் சமநிலை கடுமையாக பாதிக்கப்படுகிறது. எனவே பூமித்தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 6வது முறை பேரழிவிற்கு தன்னை உட்படுத்தும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இன்று வன உயிரின வார இறுதி தினமாகும். எனவே பொதுமக்கள் "வனவிலங்குகளை பாதுகாப்போம்' என்ற உறுதிமொழியை ஏற்க வேண்டும், என்றார்.

**விலை வீழ்ச்சியால் பீன்ஸ் விவசாயிகள் பாதிப்பு**

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் விலை வீழ்ச்சி காரணமாக பீன்ஸ் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு மாதத்திற்கு முன் ஏராளமான ஏக்கர் பரப்பில் முருங்கை பீன்ஸ், சோனாலி, பட்டர் பீன்ஸ் பயிரிட்டனர். தொடர்ந்து பூ, காய் தருணத்தில் கனமழையால் பூக்கள் உதிர்ந்தும், தாழ்வான இடத்தில் பூஞ்சாண தாக்குதல் பாதிப்பு ஏற்பட்டது. எதிர்பார்த்த மகசூலின்றி கிடைத்த காய்களை பறித்த விவசாயிகளுக்கு, விலை சரிவு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியது. காய்கள் வத்தலக்குண்டு, திண்டுக்கல், மதுரை சந்தைகளில் கிலோ ரூ.20 விற்கு விற்றது. கடந்த இரு வாரமாக முருங்கை பின்ஸ்- 30 க்கும், சோனாலி- ரூ.28 க்கும், பட்டர் பீன்ஸ் -ரூ. 60 க்கு விற்கிறது. எதிர்பார்த்த மகசூல் கிடைக்காத நிலை, பன்றி, காட்டுமாடு காவல் காத்தக் கூலி,களை எடுப்பு, பராமரிப்பு கூலி கூட

விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

### பருப்பு விலை உயர்ந்ததால் ஓட்டலில் விலை ஏற்றம்

வேடசந்தூர் : துவரை, உளுந்து உள்ளிட்ட பருப்பு வகைகளின் விலை ஏற்றத்தால், ஓட்டல்களில் உணவு பொருட்களின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த சில மாதங்களாக துவரம்பருப்பு, உளுந்து விலை உயர்ந்துள்ளது. இதே போல்தான் மளிகை பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. உணவு பொருட்களின் வெளிச்சந்தை விலையை கட்டுப்படுத்தவும், பொது விநியோகத்திட்டத்தில் சீரான முறையில் பருப்புகளை விநியோகம் செய்யவும் மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள ஓட்டல்களில் கடந்த ஒரு வாரமாக அனைத்து உணவு பொருட்களின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. வேடசந்தூர் பகுதியில்உள்ள ஓட்டல்களில் இரண்டு இட்லி ரூ.12 க்கு விற்றது. தற்போது ரூ.15க்கும், தோசை ரூ.25 ல் இருந்து ரூ.30க்கும், ஊத்தாப்பம் ரூ.20 ல் இருந்து ரூ.25க்கும், உளுந்தவடை ரூ.6 ல் இருந்து ரூ.7 க்கும் உயர்ந்துள்ளது. சாப்பாடு ரூ.50ல் இருந்து ரூ.60 ஆக உயர்ந்துள்ளது. சந்தைக்கு வந்து பொருட்களை வாங்கி விட்டு, ஓட்டல்களில் சாப்பிட செல்லும் கிராம மக்களுக்கு, திடீர் விலை உயர்வு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வேடசந்தூர் ஓட்டல் உரிமையாளர்கள் சங்க செயலாளர் ராமகிருஷ்ணனிடம் கேட்டபோது; பருப்பு, உளுந்து தற்போது கிலோ ரூ.180 முதல் 210 வரை விற்கிறது. மளிகை பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. புரோட்டா மாஸ்டருக்கு

தினமும் ரூ.650, அடுப்படி மாஸ்டருக்கு ரூ.600 ம், சப்ளையருக்கு ரூ.400 ம் கூலியாக தரவேண்டியுள்ளது. விலை உயர்வு தவிர்க்க முடியாதது. விலை உயர்த்தாவிட்டால் ஓட்டல் தொழில் நசிந்து விடும், என்றார்.

## பண்ணை பள்ளி பயிற்சி முகாம்

செந்துறை : நத்தம் வட்டாரம் செந்துறை அருகே குடகிபட்டியில் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் பண்ணை பள்ளி பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் தவமணி தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் செல்லம் முன்னிலை வகித்தார். காந்திகிராம வேளாண் மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், தொழில் நுட்ப வல்லுநர் ஷாஹின்தாஜ் நாற்றங்கால் தயாரிப்பு, உர மேலாண்மை குறித்து பயற்சி அளித்தனர். உதவி விதை அலுவலர் பாலமுருகன், வட்டார மேலாளர் ராஜாங்கம், ராஜா, குமரேசன், பத்ரிநாராயணன் ஆகியோர் நிரந்தர பூச்சி கனிப்பு திடல், பாய்நாற்று தயாரித்தல், விதை நேர்த்தி கருத்து காட்சி அமைத்து செயல் விளக்கம் அளித்தனர். நத்தம் வேளாண்மை உதவி இயக்குனர் ரவிபாரதி நன்றி கூறினார்.

## வாழையில் நூற்புழு தாக்கம்; கட்டுப்படுத்த மாணவிகள் பயிற்சி

வத்தலக்குண்டு : குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் கிராமத் தங்கல் திட்டத்தில் வாழையில் நூற்புழு நீக்குதல் குறித்து விராலிப்பட்டி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

விராலிபட்டி விவசாயி ராஜாவின் தோட்டத்தில் பூவன், ரஸ்தாளி ரகங்களில் நூற்புழு தாக்குதலை தவிர்க்க கன்று நடவு செய்யும் போதே தடுப்பு முறையை பயன்படுத்துவது குறித்து விளக்கம் அளித்தனர். மாணவிகள் அஞ்சலி, ஜெரிகாட் மெர்சி, நிவேதா, சத்யபிரபா, சத்யா,

அம்ஸா, ஜெனோபர் நினூ, லினுமேத்யூ, மோகனசங்கவி, யுவப்பிரியா ஆகியோர் குழுக்களாக வாழை விவசாயிகளுக்கு பயற்சி அளித்தனர். மாணவிகள் கூறுகையில்,""வாழையில் நூற்புழு தாக்கம் வேர், குருத்துகளில் வராமல் இருக்க கன்றுகளின் அடிப்பகுதியில் செதுக்கி, அதனை மண் கூழில் முக்கி எடுக்க வேண்டும். குருணை மருந்தை அதன் மீது பரவலாக தூவி, 24 மணி நேரம் கழித்து நடவு செய்வதால் நூற்புழு தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்" என்றனர்.

**வரத்து அதிகரித்தும் விலை இல்லை ஏலக்காய் விவசாயிகள் புலம்பல்**

கம்பம்:ஏலம் விடும் மையங்களுக்கு ஏலக்காய் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இதே நாளில் கிலோவிற்கு 100 முதல் 150 ரூபாய் வரை விலை குறைந்து இருப்பதால் விவசாயிகள் வேதனைப்பட்டு வருகின்றனர்.

சர்வதேச அளவில் இந்திய ஏலக்காய்கள் தரத்தில் முதலிடம் வகிக்கிறது. வளைகுடா நாடுகளில் இந்திய ஏலக்காய்க்கு நல்ல கிராக்கி உள்ளது. இந்தியாவின் மொத்த ஏலக்காய் சாகுபடியை 80 சதவீதம் கேரள மாநிலம் பகிர்ந்து கொள்கிறது. ஏலக்காயை பொறுத்தவரை கடந்த 20 ஆண்டுகளாகவே விலை நிலவரம் நிலையில்லாத தன்மையில் இருந்து இருக்கிறது. இதனால், ஏல விவசாயிகள் தொடர்ந்து சிக்கலை சந்தித்து வருகின்றனர். விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று "ஸ்பைசஸ்' வாரியமும் புதிய நிறுவனங்களுக்கு ஏலம் நடத்த சமீபத்தில் அனுமதி வழங்கியது. இந்த சீசனில் தற்போது ஏலம் விடும் மையங்களுக்கு ஏலக்காய் வரத்து அதிகரித்துள்ளது. பழைய கம்பெனிகளுக்கு காலையில் 90 ஆயிரம் கிலோவும், மாலையில் 80 ஆயிரம் கிலோவும் விற்பனைக்கு வருகிறது. புதிய கம்பெனிகளுக்கு தினமும் 60 ஆயிரம் கிலோ வரை வரத்து உள்ளது. சராசரியாக கிலோவிற்கு 620 முதல் 650 ரூபாய் வரை விலை கிடைத்து வந்தது. தற்போது விலை ரூ.600 க்கும் கீழ் இறங்கும்

நிலை உள்ளது. கடந்த ஆண்டு இதேநாளில் கிலோவிற்கு சராசரி விலையாக ரூ. 750 வரை கிடைத்தது.

இது தொடர்பாக ஆக்ஷன் கம்பெனி வட்டாரங்களில் விசாரித்த போது, "தற்போது 2 வது சுற்று காய் எடுக்கும் பணி நடந்து வருகிறது. 3 வது சுற்றிலும் காய் வரத்து அதிகமாக இருக்கும். 4 வது சுற்றில் சொல்ல முடியாது. விலை நிலவரத்தை கணிக்க முடியாது,' என்கின்றனர்.

முன்னோடி விவசாயிகள் கூறுகையில், "சமீபத்தில் வேலைநிறுத்தம் நடந்ததால், ஏலக்காய் எடுக்காமல் பலத்த நஷ்டத்தை விவசாயிகள் சந்தித்துள்ளனர். இந்நிலையில் தினக்கூலி ரூ. 330 எனறு நிர்ணயம் செய்தது விவசாயிகளின் வயிற்றில் புளியை கரைத்துள்ளது. இந்நிலையில் விலை கிடைக்காதது ஏலக்காய் சாகுபடியை மறுபரிசீலனை செய்ய வைத்துள்ளது' என்றனர்.

## முதல் போக அறுவடை மும்முரம் நெல் மூடைக்கு ரூ.100 விலை சரிவு

கம்பம்:கம்பம் பகுதியில் முதல் போக நெல் அறுவடை மும்முரமாக நடந்து வரும் நிலையில், கடந்த ஆண்டை விட 60 கிலோ மூடை ஒன்றிற்கு ரூ.100 விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

சில வாரங்களாக கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் அறுவடை நடந்து வருகிறது. வெளிமாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து நெல் கொள்முதலுக்கு வியாபாரிகள் வந்துள்ளனர். கம்பம், புதுப்பட்டி, உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில் 61 கிலோ கொண்ட நெல் மூடை ஒன்றின் விலை ரூ. 800 முதல் ரூ. 850 வரை கிடைத்து வருகிறது.

இந்த விலை விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த ஆண்டில் இதேநாளில் மூடை ஒன்றுக்கு ரூ. 900 முதல் ரூ. 950 வரை விலை கிடைத்தது. தற்போது சீசன் துவங்கிய போது மூடைக்கு ரூ. 900ம் வரை விலை கிடைத்தது. அறுவடை மும்முரமாகி உள்ள நிலையில்

விலை குறைந்து தற்போது ரூ. 800 மட்டுமே கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கம்பம் நீரினை பயன்படுத்துவோர் சங்க நிர்வாகி ராமகிருஷ்ணன் கூறுகையில், "உரம், பூச்சி மருந்து விலை, தொழிலாளர் கூலி அனைத்தும் அதிகரித்துள்ளது. சாகுபடி செலவு அதிகரித்தும் வருவாய் குறைவது பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. கட்டுபடியான விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வர வேண்டும்' என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடியாக குறைவு**



மேட்டூர் அணையின் நீர் மட்டம் 60 அடியாக குறைந்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 3,339 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 2,551 கனஅடியாக குறைந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு

2,700 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளதால், நேற்று முன்தினம் 61.02 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 60.66 அடியாக குறைந்தது.

**உளுந்து விலை உயர்வு: அப்பளத் தொழிலுக்கு ஆபத்து!**



உளுந்து விலை உயர்வால் மதுரையில் அப்பளத் தயாரிப்பு தொழில் நசிவடைந்து வருகிறது. இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மதுரையில் ஜெய்ஹிந்துபுரம், சோலையழகுபுரம், சிந்தாமணி உள்ளிட்ட பகுதிகளில் சிறியதும், பெரியதுமாக 50-க்கும் மேற்பட்ட அப்பள உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 20,000-க்கும் அதிகமானோர் வேலை செய்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள்.

அப்பளத் தயாரிப்புக்குத் தேவையான உளுந்து, விற்பனையாளர்களிடமிருந்து பெறப்பட்டு அப்பளமாக தயாரித்து கொடுக்கப்படுகிறது. தயாரிப்பாளர்களுக்கு கூலி மட்டும் வழங்கப்படும். விற்பனையாளர்கள் அப்பளத்தை தங்களது நிறுவன பெயரில் விற்பனை செய்வர்.

அப்பளத் தயாரிப்புக்கான முக்கிய மூலப் பொருளான உளுந்தின் விலை கடந்த 6 மாதங்களில் கிலோ ரூ.80-இல் இருந்து ரூ.200-க்கு உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வால் அப்பளத் தொழிலில்

ஈடுபட்டுள்ளோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் நஷ்டத்தை தாங்க முடியாமல் தொழிலை கைவிட்டுள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இதேநிலை தொடர்ந்தால் மதுரையில் அப்பளத் தொழில் மிகவும் குறைந்து மேலும் பலர் வேலை இழக்கும் நிலை ஏற்படலாம் என்கிறார்கள் உற்பத்தியாளர்கள். இதுகுறித்து அப்பள உற்பத்தியாளர் சங்க நிர்வாகி ராமச்சந்திரன் கூறியதாவது: கடந்த 40 ஆண்டுகளாக அப்பளத் தொழில் செய்கிறேன். விற்பனையாளர்களிடம் இருந்து 100 கிலோ உளுந்தை பெற்று 120 கிலோ அப்பளமாக தயாரித்துக் கொடுக்கிறோம். இதற்கு மூட்டை ஒன்றுக்கு கூலியாக ரூ.5,300 வழங்கப்பட்டது. தற்போது உளுந்து விலை உயர்வால் ரூ.4,650 மட்டுமே வழங்கப்படுகிறது. இதில் வாடகை, தொழிலாளர்களுக்கான கூலி, மின் கட்டணம் என அனைத்துச் செலவுகளையும் கொடுக்க வேண்டும். இதனால் பலரும் உற்பத்திக் கூடங்களை மூடி வருகின்றனர். வாரம் 40 மூட்டை அப்பளம் தயாரித்த நிறுவனங்கள் இன்று 5 மூட்டை அப்பளம் மட்டுமே தயாரிக்கின்றன. உளுந்து விலையை குறைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அப்பளத் தொழில் நசிந்துவிடும் என்றார்.

அப்பள விற்பனையாளர் சங்க நிர்வாகி சி.கே. கங்காதரன் கூறியதாவது: கடந்த ஆண்டு உளுந்து விலை மூட்டை ஒன்றுக்கு (100 கிலோ) ரூ.7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை இருந்தது. தற்போது ரூ. 18 ஆயிரம். இந்த விலை உயர்வுக்கு முன்பு அப்பளம் மொத்த விலையில் கிலோ ரூ.80க்கு கொடுப்போம். சில்லரை விலையில் ரூ.120க்கு கொடுப்போம். தற்போது மொத்த விலையே கிலோ ரூ.180க்கு விற்கப்படுகிறது. சில்லரை விலையில் ரூ.230 வரை விற்க வேண்டும். ஆனால் அதிக விலை எனக்கூறி பொதுமக்கள் வாங்க மறுக்கின்றனர். முன்பு வாரம் 50 மூட்டைகள் அப்பளம் தயாரித்த இடங்களில் தற்போது 10 மூட்டைகள் மட்டுமே தயாராகிறது என்றார்.

எனவே உளுந்து விலை உயர்வை கட்டுக்குள் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். யூக வணிகத்தில் இருந்து உளுந்தை நீக்க வேண்டும்.

அப்பளத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மானிய விலையில் உளுந்து வழங்க வேண்டும் என உற்பத்தியாளர்களும், விற்பனையாளர்களும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குற்றாலம் பகுதியில் பலத்த மழை: அருவிகளில் வெள்ளப்பெருக்கு



மேற்குத் தொடர்ச்சி மலையில் குற்றாலம் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக குற்றாலம் பேரருவி, ஐந்தருவிகளில் ஞாயிற்றுக்கிழமை தண்ணீர்வரத்து அதிகரித்தது. இதனால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க போலீஸார் தடை விதித்தனர். சனிக்கிழமை நள்ளிரவு 11 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரையிலும் இப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால், குற்றாலம் பேரருவியில் பாதுகாப்பு வளைவைத் தாண்டி தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டியது. ஐந்தருவியில் ஐந்து கிளைகளிலும் தண்ணீர் சீறிப்பாய்ந்தது. இதனால் பாதுகாப்பு கருதி பேரருவி ஐந்தருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க போலீஸார் தடை விதித்தனர்.

**கடலோர மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை ஆங்காங்கே பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட கிழக்குப் பருவ மழை அக்டோபர் 28-இல் தொடங்கவுள்ளது. இந்த மழையால் தமிழகம், புதுச்சேரி, ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் அதிகம் பயன் பெறும். இந்த நிலையில், தென் மேற்கு வங்கக் கடல், அதனை ஒட்டியுள்ள இலங்கை, கன்னியாகுமரி பகுதியில் வளி மண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி அண்மையில் உருவானது. இதனால், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மழை தீவிரம் அடைந்து வருகிறது.

இந்த நிலையில், வானிலை ஆய்வு மைய அலுவலர்கள் கூறியதாவது:

வளி மண்டல மேலடுக்கு சுழற்சியானது அதே இடத்தில் நீடிக்கிறது. இதனால், கடலோரத் தமிழகம், புதுச்சேரியில் திங்கள்கிழமை ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும்.

அடுத்த 48 மணி நேரத்தில், தென் மேற்கு வங்கக் கடலில் ஆழ்ந்த குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகும். அது செவ்வாய்க்கிழமை (அக்.27) வடக்கு நோக்கி நகரும் பட்சத்தில், பலத்தக் காற்று வீசுவதோடு, கடல் கொந்தளிக்கும் சூழலும் உருவாகும் என்றனர்.

நாங்குநேரியில் 130 மி.மீ பதிவு: இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பதிவாகியது. குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரியில் அதிகபட்சமாக 130 மி.மீட்டர் மழை பதிவானது. அடுத்தபடியாக, அந்த மாவட்டத்தில் உள்ள ஆயக்குடியில் 80 மி.மீ. மழையும், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சாத்தான்குளத்தில் 70 மி.மீ. மழையும், தென்காசி, மணிமுத்தாறில் 60 மி.மீ. மழையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறை,

பாபநாசம், ராமேஸ்வரம் உள்ளிட்ட இடங்களில் 50 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

### சூரிய ஒளியில் நாள்தோறும் 500 கிலோ நீராவி, 550 யூனிட் மின்சாரம் தயாரிப்பு: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இல்லத்தில் வெற்றிகரமான நடைமுறை

சென்னை மயிலாப்பூரில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தில் சூரிய மின்சக்தி நீராவி அடுப்பின் மூலம் கடந்த 2 ஆண்டுகளாக நாளொன்றுக்கு 500 கிலோ நீராவியும், அண்மையில் நிறுவப்பட்ட சூரிய மின்சக்தித் தகடுகள் மூலம் 550 யூனிட் மின்சாரமும் தயாரிக்கப்படுகிறது.

இந்த மாணவர் இல்லத்தில் பெற்றோரை இழந்த 700-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களின் பள்ளிக் கல்வியையும், தொழில்நுட்பக் கல்வியையும் பயின்று வருகின்றனர்.

சூரிய மின்சக்தி மூலம் நீராவியை உற்பத்தி செய்து காலையில் சிற்றுண்டி, மதிய உணவு, மாலை சிற்றுண்டி, இரவு உணவு ஆகியவை தினந்தோறும் தயாரிக்கப்படுகிறது. இதனால், ஒரு நாளுக்கு தேவையான 25-30 கிலோ சமையல் எரிவாயு பயன்பாடு தவிர்க்கப்படுகிறது. நீராவியை கலனில் சேமித்து அதற்கடுத்த நாள்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. புதுப்பிக்கப்பட்ட மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்த மக்களை வலியுறுத்துவதோடு, அதில் தாங்களே ஈடுபட முடிவு செய்ததால் சூரிய ஒளி நீராவி அமைப்பு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது.

இது தொடர்பாக இல்லத்தின் சூரிய மின்சக்தி அமைப்பின் பொறுப்பாளர் சந்திரசேகரன் மஹராஜ் கூறியது:-

சூரிய ஒளி நீராவி அடுப்பின் மூலம் 500 முதல் 550 கிலோ நீராவி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் பால், சாதம், சாம்பார், காய்கறிகள் உள்ளிட்ட பொருள்கள் தினந்தோறும் சமைக்கப்படுகின்றன.

நாள்தோறும் 550 யூனிட் மின்சாரம்: இந்த இல்லத்தில் அண்மையில் 115 கிலோவாட் ("சோலார் போட்டோ வோல்டிக்') சூரிய மின் சக்தி அமைப்பு நிறுவப்பட்டது.

இந்த அமைப்பின் மூலம் நாளொன்றுக்கு 550 யூனிட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் ராமகிருஷ்ண மிஷன் இல்லத்தின் 85 சதவீத மின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் முதல் முறையாக இங்குதான் எல்.டி.சி.டி. முறை சூரிய மின்சக்தியை அளவிடும் "நெட்' மீட்டர்கள் இங்குதான் அறிமுகப்படுத்தப்பட்டன. "நெட்' மீட்டர்கள் மூலம் தேவைக்கும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட சூரிய ஒளி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு தரப்படுகிறது என்றார்.

**விலையும் குறைவு; பராமரிப்பும் எளிது!**

சூரிய ஒளி மின்சக்தித் தகடுகளின் விலையும் குறைவு, பராமரிப்பும் எளிது என்கிறார் சந்திரசேகரன் மஹராஜ்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

"சன் எடிசன்' என்ற கம்பெனி சூரிய ஒளி மின்சக்தித் தடுகளின் அமைப்பை இலவசமாக மிஷன் மாணவர் இல்லத்துக்கு அமைத்து வழங்கினர். இதன் பராமரிப்பு மிகவும் எளிமையாகவும், விலை குறைவாகவும் உள்ளது. மேலும், பல சூரிய மின்சார அமைப்புகளை நிறுவ மாணவர் இல்லம் முயற்சித்து வருகிறது. இங்குள்ள அமைப்புகளை பல்வேறு பள்ளிகள், கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும் பார்வையிட்டு ஆலோசனைகளைப் பெற்றுச் செல்கின்றனர்.

வளரும் மாணவர் சமுதாயத்திற்கு மரபு சாரா எரிசக்தியை அன்றாட வாழ்வில் வெற்றிகரமாக எவ்வாறு பயன்படுத்த முடியும் என்று காட்டுவதே எங்கள் இல்லத்தின் நோக்கம் என்றார்.

'ஒரு நாளுக்கு தேவையான 25-30 கிலோ சமையல் எரிவாயு பயன்பாடு

தவிர்க்கப்படுகிறது. நீராவியை கலனில் சேமித்து அதற்கடுத்த நாள்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது'

## துவரம் பருப்பு விளைச்சலில் சாதிக்கும் சிவரக்கோட்டை விவசாயிகள்

திருமங்கலம் அருகே உள்ள சிவரக்கோட்டையில் தமிழகத்தில் வேறெங்கும் இல்லாத வகையில் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு மற்றும் பாசிப் பருப்பு பயிரிடப்பட்டு அமோக விளைச்சலை தந்துள்ளது.

சிவரக்கோட்டை, கரிசல்காளாம்பட்டி, சுவாமிமல்லம்பட்டி மற்றும் செங்கப்படை கிராமங்கள் அடுத்தடுத்து உள்ளன. இந்தப் பகுதிகளில் கரிசல் மண் பரவிக் கிடக்கிறது. ஒரு மழை பெய்தால் போதும், ஒரு மாதத்துக்கு தேவையான தண்ணீரை தேக்கி வைக்கும் ஆற்றல் கொண்டது இந்த கரிசல் பூமி. இந்நிலையில் சிப்காட் தொழிற்பேட்டை இந்தப் பகுதியில் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து விவசாய நிலங்களை கையகப்படுத்த முனைந்துள்ளது. இதை எதிர்த்து அந்த பகுதியினர் போராடி வரும் அதே நேரத்தில் சிவரக்கோட்டை பகுதியில் ஆண்டு முழுவதும் விவசாயம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுகளில் இங்குள்ள உள்ள 400 ஏக்கரில் மட்டும் 100 குவிண்டாலுக்கும் அதிகமாக துவரம் பருப்பு விளைந்து, சிவரக்கோட்டை அரசு கூட்டுறவு வங்கியின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள விலை ஒரு கிலோவுக்கு ரூ.25லிருந்து ரூ.30 மட்டுமே. தற்போது சிவரக்கோட்டை பகுதியில் சுமார் 2000 ஏக்கர் பரப்பளவில் விதைக்கப்பட்டுள்ள துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளின் விளைச்சல் இன்னும் அதிகம். உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் தனியாருக்கு அவற்றை விற்று விடுகின்றனர். இதனால் துவரம் பருப்பு பதுக்கப்பட்டு இன்று கிலோ ரூ.210க்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

துவரம் பருப்பு பயிரிடப்பட்டு 6 மாதங்களில் விளைச்சலை எடுக்கலாம். அதே போல் உளுந்தம் பருப்பு மற்றும் பாசிப் பருப்பு வகைகளுக்கு 60 நாள்கள் போதும்.

இன்று இந்தியா முழுவதும் துவரம் பருப்பு விலை எகிறிக் கொண்டு செல்லும் நேரத்தில், விளைந்த பயிர்களுக்கு உரிய பணம் கிடைக்காமல் சிவரக்கோட்டை விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து மதுரை மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ராமலிங்கம் கூறுகையில், சிவரக்கோட்டை பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் அரசாணையை முதல்வர் ஜெயலலிதா ரத்து செய்ய வேண்டும். பருப்பு மற்றும் தானியப் பயிர்களின் சொர்க்க பூமியாக விளங்கும் சிவரக்கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விளையும் பயிர்களுக்கு உரிய விலை கிடைத்தால் சிவரக்கோட்டை பகுதி விவசாயிகள் தமிழகத்துக்கு பருப்பு மற்றும் தானிய வகைகளை தடையின்றி தர முடியும் என்று கூறினார்.

### விவசாயிகளுக்கான விதை கிராமத் திட்டப் பயிற்சி

வத்தலகுண்டு வட்டாரம் விருவீடு, தர்மத்துப்பட்டியில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ், பயறு வகைப் பயிர்களில் விவசாயிகளுக்கான விதை கிராமத் திட்டப் பயிற்சி நடைபெற்றது.

இதில், வத்தலகுண்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ. கோபால்ராஜ் தலைமை வகித்து, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளான பூச்சி, நோய் நிர்வாகங்களை ரசாயனம் இல்லாத எளிய முறைகளில் இயற்கைத் தாவரங்களைப் பயன்படுத்தி, நோய்களைக் கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கும் வழியைக் கூறினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை இணை இயக்குநர் பாஸ்கரன், வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்து,

ஒருங்கிணைந்த உழவியல் முறைகள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி விவசாயிகளிடம் கலந்துரையாடினர்.

முன்னதாக, வத்தலகுண்டு வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் கார்த்திகா வரவேற்று, பயிற்சியின் நோக்கத்தை எடுத்துரைத்தார். பின்னர், விதைப் பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்படும் விதைகள் அரசால் அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்படும் என்ற விவரத்தையும் எடுத்துரைத்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கண்ணன், விக்னேஷ்வரி, துணை வேளாண்மை அலுவலர் ஆகியோர் மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் பயிர்களில் நுண்ணூட்டங்களின் பங்கு பற்றியும், விதை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினர். இதில், விவசாயிகள் விதைப்பண்ணை மூலம் விதைகள் உற்பத்தி செய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**பழனி விவசாயிகளுக்கு மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள் பயிற்சி**

பழனியை அடுத்த மானூர், கோவிலம்மாபட்டியில் மண்மாதிரி, அசோல்லா உற்பத்தி குறித்து, மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் கிராமத் தங்கல் மற்றும் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ், பழனி சுற்று வட்டாரப் பகுதிகளில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகளையும் வழங்கி வருகின்றனர்.

பழனியை அடுத்த மானூரில் அசோல்லா உற்பத்தி குறித்து செயல்விளக்கம் அளித்தனர். அப்போது, அசோல்லா பாசி வகையைச் சேர்ந்த மிதக்கும் பச்சைத் தாவரம். இது, பயிருக்கு உரமாகவும், பன்றி, கோழி, முயல் போன்ற கால்நடைகளுக்கு உணவாகவும் பயன்படுகிறது.

இதில், கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்பு உள்ளிட்ட ஏராளமான வைட்டமின்களும், வளர்ச்சி ஊக்கிகளும் உள்ளன.

இதை வளர்க்க 6 அடிக்கு 4 அடி அளவிலான பிளாஸ்டிக் அல்லது சிமெண்ட் தொட்டியில் கால் பங்குக்கு வண்டல் மண், செம்மண், தொழுஉரம் போன்ற செறிவூட்டப்பட்ட மண்ணை நிரப்பி, அதில் முக்கால் பங்குக்கு தண்ணீர் நிரப்ப வேண்டும்.

இதில், அசோல்லாவை வளர்க்கும்போது வாரத்துக்கு இரு முறை ஒரு கிலோ சாணம், நூறு கிராம் பாஸ்பரஸ் கலந்து ஊட்டமளித்தால், ஒரு நாளைக்கு ஒரு கிலோ அசோல்லா உற்பத்தியாகும் எனத் தெரிவித்தனர். இதில், 15-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

முன்னதாக, கோவிலம்மாபட்டியில் இம்மாணவர்கள் மண்மாதிரி எடுத்தல் மற்றும் அதன்மூலம் மண்ணின் அமைப்பு, வளம் அறிவது குறித்து செயல்விளக்கம் அளித்தனர். அதில், விவசாயிகள் தாங்களாகவே மண்மாதிரி எடுத்து, ரூ. 20 செலவில் பரிசோதனை செய்து கொள்ளலாம் என விவரித்தனர்.

**ராமநாதபுரத்தில் சாரல்மழை**

ராமநாதபுரத்தில் சனிக்கிழமை முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது.

கன்னியாகுமரி கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருப்பதால் தமிழகத்தில் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்டத்தில் சனிக்கிழமை முழுவதும் வானம் மேக மூட்டத்துடனையே காணப்பட்டது. அதிகாலை மாலை முதல் இரவு வரை தொடர்ந்து லேசான மழைத்தூறல் விழுந்து கொண்டே இருந்தது.

ஆனால், பாம்பனில் 11.80 மி.மீ,மண்டபத்தில் 31 மி.மீ,ராமேசுவரத்தில் 13.20 மி.மீ,தங்கச்சி மடத்தில் 2.80 மி.மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளது. மாவட்டத்தின் மொத்த மழையளவு 58.மி.மீட்டராகும். சராசரி மழையளவு 3.68 மி.மீட்டராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய அரிய வகை மீன்கள்**

பாம்பன் மீனவர்கள் வலைகளில் அரிய வகை பாறை,கிளி மீன்கள் சிக்கின. பாம்பன் பகுதியில் 40 ஆண்டுகளுக்கு மேலாக மீனவர்கள் மீன்பிடித்தொழில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தென்கடல் பகுதியில் சுழற்ச்சி முறையில் வாரத்தில் மூன்று நாட்கள் மீன்பிடிக்கச் செல்கின்றனர். இந்நிலையில் வியாழக்கிழமை காலையில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்று மீன்களை பிடித்துக்கொண்டு வெள்ளிக்கிழமை காலையில் கரை திரும்பி வந்தனர்.

இதில் தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த மீனவரின் படகிலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க விரித்திருந்த வலையில் 51 கிலோ எடையளவும்,5 அடி நீளத்திலும், 2 அடி சுற்றளவிலும் கூடிய பெரிய கருங்கன்னி பாறை மீன் கிடைத்திருந்தது. இந்த மாதிரியான மீன் 10 ஆண்டுகளுக்கு பின்பு இப்பகுதியில் கிடைத்ததால் மீனவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். மேலும் இந்த மீனை வியாபாரிகள் கிலோவுக்கு ரூ.180 வரை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

அரிய வகை கிளி மீன்: மற்றொரு மீனவர் வலையில் அரிய வகை கிளி மீன் சிக்கியிருந்தது. ஆழ்கடலில் பாறைகளில் வாழக்கூடியவையான இந்த மீன்கள் உணவு தேடி வெளியில் வரும்போது மீனவர்கள் வலையில் சிக்கிவிடுகின்றன. மேலும் இந்த மாதிரியான மீன்களை நம் நாட்டில் உணவுக்கு பயன்படுத்துவதில்லை. ஆனால் ஜப்பான்,மலேசியா போன்ற வெளிநாடுகளில் அதிகமாக உணவு விடுதிகளில் உணவுக்கு இந்த மீன்களை பயன்படுத்துகின்றனர்.

ஆதலால் வெளிநாடுகளில் இந்த மாதிரியான மீன்களுக்கு அதிக வரவேற்பு இருப்பதால் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி செல்வார்கள்.

இதனையொட்டி வெள்ளிக்கிழமை மீனவர் வலையில் 4 கிலோ முதல் 10 கிலோ வரையிலான எடை அளவு கொண்ட மீன்கள் 10 க்கும் மேற்பட்டவை கிடைத்திருந்தன. இந்த கிளி மீன்களை 1 கிலோவுக்கு 400 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை வியாபாரிகள் விலை கொடுத்து வாங்கி சென்றதால் செலவினத்தோடு பல மடங்கு வருவாய் கிடைத்ததால் மீன்களை பிடித்து வந்த மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**வால்பாறையில் சுற்றுலா வளர்ச்சி கலந்தாய்வுக் கூட்டம்**

வால்பாறையில் சுற்றுலா வளர்ச்சி குறித்த கலந்தாய்வுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு, சட்டப்பேரவை உறுப்பினர் மா.ஆறுமுகம் தலைமை வகித்தார். கூட்டுறவு நகர வங்கித் தலைவர் வி.அமீது முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மா.ஆறுமுகம் பேசுகையில், "வால்பாறையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள எஸ்டேட் நிர்வாகத்தினர் தடையாக உள்ளனர். எனவே, வால்பாறை பகுதியில் உள்ள அனைத்து தேயிலைத் தோட்டங்களையும் மறு ஆய்வு செய்து அளவீடு செய்ய வேண்டும்' என்றார்.

கூட்டுறவு வங்கித் தலைவர் வி.அமீது பேசுகையில்,"வால்பாறை பகுதியில் இந்த ஆட்சியில் ரூ. 20 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதிக்கு தேவையான வளர்ச்சிப் பணிகள் குறித்து அமைச்சரிடம் வலியுறுத்துவேன்' என்றார்.

தோட்டக்கலை மற்றும் சுற்றுலாத் துறை அதிகாரிகள் பேசியது:வால்பாறையில் 55 ஏக்கரில் தாவரவியல் பூங்காவும், 25

ஏக்கரில் படகு இல்லமும் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடங்கள் இதுவரை எஸ்டேட் நிர்வாகத்தினரிடம் இருந்து கையகப்படுத்தாமல் உள்ளது. அந்த இடங்களில் நிர்வாகத்தினர் தேயிலை பயிரிட்டுள்ளனர். வருவாய்த் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு நிலங்களை எங்களிடம் ஒப்படைத்தால், உடனடியாக படகு இல்லம், பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

இக்கூட்டத்தில், காவல் துணைக் கண்காணிப்பாளர் சக்திவேல், வட்டாட்சியர் சதீஷ், நகராட்சி ஆணையர் சாந்தகுமார், நகராட்சி துணைத் தலைவர் மயில்கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பச்சை மிளகாய் விலை உயர்வு**

பச்சை மிளகாயின் விலை உயர்வடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பச்சை மிளகாய் 6 மாத காலப் பயிர் ஆகும். இந்த ஆண்டு வைகாசி பட்டத்தில் கணிசமான விவசாயிகள் பச்சை மிளகாய் சாகுபடியில் ஈடுபட்டனர். இந்த சீசனில் மிளகாய் வரத்து அதிகரித்ததால், அதன் விலை சரிவடைந்தது. ஒரு கிலோ மிளகாய் ரூ. 10-க்கு விற்பனையானது.

இந்நிலையில், நடப்பு மாதத் துவக்கத்தில் இருந்து பரவலாக மழை பெய்ததால் செடியில் இருந்த பூக்கள் உதிரத் துவங்கின. மேலும், விலை கட்டுப்படியாகாததால் விவசாயிகள் பச்சை மிளகாய் பறிப்பதை நிறுத்தி விட்டு செடிகளிலேயே பழுக்க விட்டனர். இந்த காரணங்களால் மிளகாய் சாகுபடி குறைந்தது. அதே சமயம் தேவை அதிகரித்ததால் விலை சற்று உயர்ந்துள்ளது. தற்போது, ஒரு கிலோ பச்சை மிளகாயை ரூ. 16-க்கு விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். உழவர் சந்தையில் சில்லறை விலையில் கிலோ ரூ. 20-க்கு விற்பனையாகிறது. மிளகாய் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**தேயிலைத் தோட்டங்களை கவாத்து செய்யும் பணி துவக்கம்**

நீலகிரி மாவட்டத்தில் தற்போது மழை பெய்து வருவதால், தேயிலைத் தோட்டங்களை கவாத்து செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தேயிலை வாரியம், உபாசி வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவற்றின் பரிந்துரையின் பேரில், 3 முதல் 5 ஆண்டுகள் வரை உள்ள தேயிலைச் செடிகளை மழைக் காலங்களில் கவாத்து செய்ய வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலான மழை பெய்து வருவதால், குன்னூர் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது தேயிலைத் தோட்டங்களில் கவாத்து செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இதுபோல் கவாத்து செய்யும் தேயிலைச் செடிகளில் நோய் ஏற்பட்டு காய்ந்து வருவதைத் தடுக்க, புளூகாப்பர் என்ற மருந்தை கவாத்து செய்யப்பட்ட கட்டைகளில் விவசாயிகள் பூசுகின்றனர். இதனால், வெட்டுப்பட்ட காயம் மறைந்து விரைவில் தேயிலைச் செடிகளில் நல்ல மகசூல் கிடைக்கும்.

குறித்த காலத்தில் கவாத்து செய்வதன் மூலமாக பசுந்தேயிலை, தேயிலைத் தூளின் தரம் உயர்ந்து காணப்படும் என்பதால் கவாத்து செய்யும் விவசாயிகளுக்கு, தேயிலை வாரியம் சார்பில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

## பசுமை வீடுகள் கட்டும் பணி:டிசம்பர் 31-க்குள் முடிக்க உத்தரவு

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2015-16-ஆம் நிதியாண்டில் கட்டப்படும் பசுமை வீடுகளின் கட்டுமானப் பணியை டிசம்பர் 31-க்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை மூலம் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார். ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மா.காளிதாசன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய ஆட்சியர் அ.ஞானசேகரன், மாவட்டத்தில் 2015-16-ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டு வரும் இந்திரா நினைவுக் குடியிருப்புகள், பசுமை வீடுகளை 2015 டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் கட்டி முடிக்க வேண்டும். இதேபோல, தாய் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் நடைபெறும் பணிகளையும் டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதில், செயற்பொறியாளர்கள் சீனுவாசன், ராமகிருஷ்ணன், 18 ஒன்றியங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இலவச காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நிறைவு

அரூரை அடுத்த எருமியாம்பட்டி இ.ஆர்.கே. மகளிர் கல்லூரியில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

சேலம் பெரியார் பல்கலை. நிதியுதவியுடன் தமிழக அரசின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (எஸ்.இ.டி.பி) இ.ஆர்.கே. கல்லூரி வளாகத்தில் 10 நாள்கள் இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சி நிறைவு விழாவில் இ.ஆர்.கே. கல்வி நிறுவனங்களின் தாளாளர் இ.ஆர்.செல்வராஜ் தலைமை வகித்தார்.

விழாவில் சேலம் பெரியார் பல்கலை. தொலைநிலைக் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) ஆர்.பாலகுருநாதன், சேலம் பெரியார் பல்கலை. முன்னாள் தேர்வாணையர் ஜெ.ஜெயக்குமார், கல்லூரி முதல்வர் எம்.மனோகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோழிப் பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

அரியலூர் மாவட்டத்தில் கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றார் ஆட்சியர் ஏ. சரவணவேல் ராஜ்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் 5,000 கறிக்கோழி பண்ணைகள் 50% அரசு மானியத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர், சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் பயன்பெறலாம். கடந்த 2012-13 ஆம் ஆண்டு 50 நபர்களுக்கு கோழி வளர்க்க ரூ. 1.03 கோடி மதிப்பிலும், 2013- 14 ஆம் ஆண்டு 25 நபர்களுக்கு ரூ. 51 லட்சம் மதிப்பிலும், 2014-15 ஆம் ஆண்டு 50 பேருக்கு ரூ. 80 லட்சம் மதிப்பிலும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த கோழி

வளர்ப்பை மேம்படுத்திட 50% மானியத்தில் கோழிகளுக்கான தீவனம் மற்றும் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

குறைந்த பட்சம் 5,000 கோழிக் குஞ்சுகளுக்கு, கோழிக்கு ஒரு சதுர அடி வீதம் 5,000 சதுர அடி பண்ணை கொட்டகை அமைக்க சதுர அடிக்கு ரூ. 200 வீதம் உத்தேச செலவீனம் ரூ. 10 லட்சமும், உபகரணங்களுக்கு ரூ. 75 ஆயிரமும் என ரூ. 10.75 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் 25%அரசு மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை வங்கி கடனுதவியாக வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு, அரியலூர் உதவி இயக்குநர்(94439 54958) உடையார் பாளையம் உதவி இயக்குநர்(94450 01207) ஆகியோரைத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரசாயன கொசுவலை: வேளாண்துறை எச்சரிக்கை**

கரூரில் அனுமதியின்றி ரசாயனம் கலந்த கொசுவலைகளை உற்பத்தி செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக தாந்தோணி வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஷோபா, கரூர் வேளாண் உதவி இயக்குநர் லட்சுமணசாமி ஆகியோர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கரூர் மற்றும் தாந்தோணி வட்டாரங்களில் சென்னை வேளாண் இயக்குநர் அலுவலக உரிமம் வழங்கும் அலுவலரிடம் உற்பத்தி உரிமம் பெறாமல் ஆல்பா சைபர் மெத்ரின் கலந்த ரசாயனக் கொசுவலைகளை சிலர் தயாரிப்பதாக பெறப்பட்ட புகாரையடுத்து வேளாண் துறை அதிகாரிகளால் மாவட்டத்தில் பல இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் பூச்சி மருந்துச் சட்டம் 1968 மற்றும் பூச்சி மருந்து விதிகள் 1971 ஆகியவற்றை மீறி உரிமம் பெறாமல் ஆல்பா சைபர் மெத்ரின் கலந்த கொசுவலைகளைத் தயாரித்ததாக கரூர் வட்டத்தில் 3 நிறுவனங்கள்

மீதும், தாந்தோணி வட்டாரத்தில் 3 நிறுவனங்கள் மீதும் கரூர் நீதிமன்றத்தில் வேளாண் துறை சார்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. உரிமம் இன்றி பூச்சி மருந்து தயார் செய்வதோ, அதைக் கொண்டு கொசுவலை தயாரிப்பதோ சட்டப்படி குற்றம். இதுதொடர்பாக அனைத்து நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் ஏற்கெனவே எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே விதிகளை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## நாட்டுக்கோழி வளர்க்க 300 பேருக்கு உபகரணங்கள்

நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 300 பேருக்கு கோழி வளர்ப்பு உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வழங்கினார்.

கரூர் மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தும்பிவாடியில் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற சமச்சீர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புறக்கடையில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பு கூண்டுகள், தீவன அரவை இயந்திரம், கோழி தீவனம் மற்றும் வைட்டமின் மருந்துகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி பேசியது:

கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் சார்பில் கிராமங்களில் வறுமையில் உள்ள குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சுயதொழில் பயிற்சியுடன் வழங்கும் நோக்குடன் கோழி வளர்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராமப்புற மக்களுக்கு ஒரு நிரந்தர வருமானம் தரும். முக்கியமாக மக்களுக்கு தரம் உயர்ந்த புரதச்சத்தைத் தருவதோடு மட்டுமல்லாமல் ஏழை எளியோருக்கும் ஊரக மகளிருக்கும் கூடுதல் வருமானம் கொடுக்கும் தொழில். மிகக்குறைந்த செலவில் இடுப்பொருட்களை கொண்டு வளர்க்கப்பட்டு அதிக லாபம் தரும்

தொழிலாக உள்ள புறக்கடை நாட்டுக்கோழி வளர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாநிலத் திட்டக் குழுவின் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் பரமத்தி வட்டாரத்தில் புறக்கடையில் நாட்டுக்கோழி வளர்ப்பு என்னும் திட்டம் கரூர் மாவட்ட கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் சார்பில் பரமத்தி வட்டாரத்திலுள்ள நலிந்த மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் செயல்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் இப்பகுதியில் நாட்டுக்கோழிகள் அதிகளவில் வளர்க்கும்

நோக்குடன் பவித்திரம், புன்னம், தும்பிவாடி, சூடாமணி, பரமத்தி, நடந்தை மற்றும் துக்காச்சி கிராமங்களிலிருந்து 300 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒரு குழுவில் 75 நபர் வீதம் 4 ஒத்த தொழில் குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கோழி வளர்ப்புக் கூண்டு, 5 பெட்டை மற்றும் 1 சேவல் என 6 கோழிகள் வழங்கப்படுகின்றன. மேலும் ஒரு செயற்கை முறை குஞ்சு பொறிப்பான் மற்றும் தீவன அரவை இயந்திரமும் வழங்கப்படவுள்ளது. இதற்காக பயனாளிகளின் பங்குதொகையான ரூ.780-வசூலிக்கப்பட்டு குழுவின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் சேர்க்கப்படுகிறது. பொதுவாக நாட்டுக்கோழிகள் ஆண்டுக்கு 80 முட்டைகள் வரை இடுகின்றன. 5 கோழிகள் வளர்க்கப்படும்போது 400 முட்டைகள் வரை கிடைக்கும். இதில் 150 முட்டைகளை குடும்பத் தேவைக்காக பயன்படுத்தலாம். மீதி 250 முட்டைகளை அடைவைக்கும்போது 200 குஞ்சுகள் வரை உற்பத்தி செய்யலாம். இவற்றை விற்கும்போது சராசரியாக ஒரு மாதத்திற்கு ரூ. 1500 முதல் ரூ. 2000 வரை வருமானம் ஈட்ட முடியும் என்றார். பின்னர் தேர்வு செய்யப்பட்ட 300 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழிகள், கோழி வளர்ப்புக் கூண்டு, தீவன அரவை இயந்திரம் உள்ளிட்டவற்றை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் முனைவர் அகிலா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்ரமணியம், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மார்க்கண்டேயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாய விளைநிலங்களில் ஆட்சியர் திடீர் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அன்னமங்கலம் பகுதியில் உள்ள விவசாய விளைநிலங்களை சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் ஆட்சியர் தரேஸ் அஹமது

இந்த ஆய்வில், வேப்பந்தட்டை வட்டம், அன்னமங்கலம் கிராமத்தில் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் 1 ஹெக்டேர் பரப்பளவில் சம்மங்கி பூ சாகுபடி செய்துள்ளதையும், மக்காச்சோளம் பயிரிட்டுள்ளதை பார்வையிட்ட ஆட்சியர் அரசின் நலத்திட்டங்கள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, விசுவக்குடி அணை பகுதிக்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்ட அவர், குறித்த காலத்துக்குள் திட்டப்பணிகளை முடிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். தொடர்ந்து, தொண்டமாந்துறை மற்றும் எசனையில் கட்டப்பட்டுள்ள தனிநபர் கழிப்பறைகளை பார்வையிட்டு கழிப்பறைகளின் அவசியம் குறித்து பொதுமக்களிடம் எடுத்துக் கூறினார் ஆட்சியர் தரேஸ் அஹமது. ஆய்வின்போது, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் இந்திரா, வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வேளாண் கூட்டுறவுச் சங்கத்தில் நகைக் கடன்**

நூத்தப்பூர் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் நகைக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றார் சங்கத் தலைவர் குமாரசாமி.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், நூத்தப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களுக்கு கடன் தொகை வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்கள் மற்றும் துணை உறுப்பினர்களுக்கு கடன் தொகை அளித்த அவர் மேலும் பேசியது:

இந்தச் சங்கமானது 1936-ல் தொடங்கப்பட்டு, இதுவரை நகைக் கடன் வழங்கப்படாமல் இருந்தது. இந்நிலையில், தற்போது ரூ. 2 லட்சத்துக்கு நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. நூத்தப்பூர் கிராம மக்களுக்கு குறைந்த வட்டியில் நகைக்கடன் வழங்கப்படும். சிறப்பு நகைக்கடன் தொகையாக ரூ. 50 லட்சம் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

திருச்சி மத்தியக் கூட்டுறவு வங்கியால் காசுக் கடனாக ரூ. 50 லட்சம் வழங்க அனுமதி பெற்று, அதில் ரூ. 2 லட்சம் உறுப்பினர்கள் மற்றும் துணை உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது என்றார் அவர்.

நிகழ்ச்சியில் வேப்பந்தட்டை கள அலுவலர் சி. கிருஷ்ணமூர்த்தி, சங்கப் பணியாளர்கள் செல்வராஜ், முருகேசன், செல்லக்கருப்பன், உறுப்பினர் நல்லத்தம்பி, சங்க துணைத் தலைவர்கள் சின்னசாமி, முத்துசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

### அக். 27-ல் மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி

பெரம்பலூர் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் அக். 27 ஆம் தேதி விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி நடைபெற உள்ளது என்றார் மையத்தின் முதுநிலை விஞ்ஞானியும், தலைவருமான (பொ) சி. கதிரவன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் விவசாயிகளுக்கு அக். 27 ஆம்

தேதி மண்புழு உரம் தயாரித்தல் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. இதில் மண்புழு உரத்தின் முக்கியத்துவம், மண்புழு உரம் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய விதிமுறைகள், மண்புழு உரம் தயாரிக்க ஏற்ற பொருள்கள், குழிமுறை மற்றும் வர்த்தக ரீதியாக குவியல் முறையில் மண்புழு உர உற்பத்தி, மண்புழு உரம் பிரித்தெடுத்தல், மண்புழு உரத்தின் பயன்கள், உர சிபாரிசுகள் ஆகியவை குறித்து காணொலி காட்சி மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட உள்ளது. முகாமில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் நேரில் அல்லது 8939003569 என்ற எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விவசாயிகளே பயிற்சியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்றார்.

## 526 விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு நிவாரணத்தொகை அளிப்பு

விளாத்திகுளம் அருகே வெள்ளையம்மாள்புரம் கிராம தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர் காப்பீடு செய்த 526 விவசாயிகளுக்கு இழப்பீட்டு நிவாரணத்தொகை வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வெள்ளையம்மாள்புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் ஜீ. ஜெயசீலன் தலைமை வகித்தார். சங்கத்தின் துணைத் தலைவர் சுப்புராஜ், செயலர் செல்வகுமார், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் ஆர்.வி.வையணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விளாத்திகுளம் எம்.எல்.ஏ. ஜீ.வி. மார்க்கண்டேயன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வெள்ளையம்மாள்புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 2013-14ஆம் ஆண்டில் உளுந்து, பாசி, கம்பு,

மக்காச்சோளம், சோளம், எள், பருத்தி, சூரியகாந்தி, மிளகாய் ஆகிய பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்திருந்த 526 விவசாயிகளுக்கு இழப்பீட்டு நிவாரணத் தொகையாக ரூ.1 கோடியே 2 லட்சத்து 35 ஆயிரத்துக்கான காசோலையை வழங்கிப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வெள்ளையம்மாள்புரம் ஊராட்சி மன்றத் தலைவர் நாகஜோதி ராமமூர்த்தி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் பி.டி.ஆர். ராஜகோபால், துணைத் தலைவர் வெம்பூரார், கூட்டுறவு சங்க இயக்குநர்கள் கருப்பசாமி, முருகேசன், ஆறுமுகம், செல்வராஜ், ராமசுப்பையா, அதிமுக மாவட்டப் பிரதிநிதி பி.பி.கே. ராமமூர்த்தி, ஜெயலலிதா பேரவைச் செயலர் அன்புசெல்வன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**களக்காட்டில் பலத்த மழை: ஆறுகளில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு**

களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் சனிக்கிழமை இரவு பெய்த பலத்த மழையால் மலைப்பகுதி ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதையடுத்து, மலைப்பகுதியில் உள்ள ஆறுகள், அருவிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலும், நகரப்பகுதியிலும் சனிக்கிழமை நள்ளிரவு தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரையில் பலத்த மழை பெய்தது. இதையடுத்து, மலைப்பகுதியில் உள்ள தலையணை, சிவபுரம் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. தேங்காய் உருளி அருவியில் தண்ணீர் கொட்டுகிறது. கோழிக்கால், கருங்கல்கசம் பகுதியிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மலைப்பகுதியில் இரவு தொடங்கி அதிகாலை வரை மழை பெய்ததால் தண்ணீர் கருமை நிறத்தில் கலங்கலாக பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த மழையால் மலைப்பகுதியில் உள்ள ஆறுகள், அருவிகளுக்கு சுற்றுலாப்

பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. களக்காடு நான்குனேரியன் கால்வாய், பச்சையாற்றிலும் தண்ணீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஆறுகளில் வரும் தண்ணீர் பாசன குளங்களுக்கு திறந்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகள் நாற்று பாவும் பணிகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

**பருப்பு பதுக்கல்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் மாநில அரசுகளுக்கு பொன்.ராதாகிருஷ்ணன் வேண்டுகோள்**



ஆலந்தூர்,

பருப்பு பதுக்கல்காரர்கள் மீது மாநில அரசுகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார்.

<u>தமிழக மீனவர்கள்</u>

மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன் தூத்துக்குடியில் இருந்து நேற்று சென்னை வந்தார். விமான நிலையத்தில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:–

பிரதமர் நரேந்திர மோடி முயற்சியின் காரணமாக இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டு அடுத்த ஓரிரு தினங்களில் திரும்ப உள்ளனர். மோடி பிரதமராக பதவி ஏற்ற பின்பு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு

உள்ளனர். இதற்காக பிரதமர், வெளியுறவு துறை மந்திரி சுஷ்மா சுவராஜ் ஆகியோருக்கு தமிழக மீனவர்கள் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

<u>நிரந்தர தீர்வு</u>

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்தால் கைது செய்வதுடன் ரூ.15 கோடி வரை அபராதம் விதிக்கப்படும் என இலங்கை மீன்வளத்துறை அதிகாரி பேசியதாக செய்திகள் வருகின்றன. அப்படி பேசியிருந்தால் தவறு. அவர் பேசியதை ஏற்க முடியாது.

இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்தால் இந்திய கடலோரப்படை பிடித்தால் இலங்கை மீனவர்களுக்கு ரூ.40 கோடி வரை அபராதம் விதிக்க முடியும். இது போல் மாறி மாறி அபராதம் விதிப்பதால் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது. நிரந்தர தீர்வு காண பிரதமர் மோடி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

<u>பருப்பு விலை</u>

சமீபத்தில் பருப்பு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து இருந்தது. மத்திய அரசு எடுத்த அதிரடி நடவடிக்கையால் பதுக்கி வைக்கப்பட்ட பருப்பு மூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு வெளிக்கொண்டு வரப்பட்டது. தற்போது பருப்பு விலை குறைய தொடங்கி உள்ளது.

மாநில அரசுகளும் கள்ளச்சந்தைக்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து பதுக்கி வைக்கப்பட்டு உள்ள பருப்பு மூட்டைகளை வெளிக்கொண்டு வரவேண்டும். கள்ளச்சந்தைக்காரர்கள் மீது மாநில அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## வீராணம் ஏரியில் இருந்து பாசனத்திற்கு கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும்

காட்டுமன்னார்கோவில்

வீராணம் ஏரியில் இருந்து பாசனத்திற்கு கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பா சாகுபடி

கடலூர் மாவட்டத்தில் கடைமடை பகுதியாக காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் பகுதி இருந்து வருகிறது. இங்கு விவசாயிகளின் நீர் ஆதாரமாக இருந்து வரும் வீராணம் ஏரி மூலம் சுமார் 1 லட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வருகிறது. மொத்தம் 47.50 அடி கொள்ளளவு கொண்ட ஏரியில் தற்சமயம் 45.65 கனஅடி நீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு கீழணையில் இருந்து 225 கனஅடி அளவில் தண்ணீர் வரத்து உள்ளது. மேலும் சென்னைக்கு 75 கனஅடி அனுப்பப்படுகிறது.



இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் பாசனத்திற்கு குறைந்தளவு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் சம்பா சாகுபடியில் தீவிரமாக ஈடுபட தொடங்கினார்கள். இந்த நீர் கடைமடை பகுதிக்கு கூட சென்று சேரவில்லை. இதனால் சம்பா பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் அதிருப்தி

இந்த நிலையில், ஏரியில் இருந்து பாசனத்துக்காக திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று முன்தினம் முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஏற்கனவே விவசாயிகள் கூடுதல் தண்ணீர் கேட்டு வந்த நிலையில், தண்ணீர் திடீரென நிறுத்தப்பட்டு இருப்பது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இனி திறக்கும் போது ஏற்கனவே திறந்த அளவில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

## கடலூரில் சாரல் மழை



கடலூர்,

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள இலங்கை கடல் பகுதியில் உருவாகி இருந்த மேல் அடுக்கு சுழற்சி தொடர்ந்து நீடித்து வருவதால், அடுத்த 24 மணி நேரத்தில் வடமாநிலங்களில் ஓரிரு இடங்களிலும், தென் மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

அதன்படி நேற்று கடலூரில் காலையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. பின்னர் 11 மணிக்கு பிறகு திடீரென வானில் கருமேகங்கள் சூழ்ந்து, குளிர்ந்த காற்று வீசத்தொடங்கியது. சற்று நேரத்தில் பலத்த

காற்றுடன் சாரல் மழை பெய்தது. இந்த மழை 15 நிமிடமே நீடித்தது. இருப்பினும் இந்த மழையினால் தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கியது. வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துடன் சென்றனர்.

கடலூர் வேணுகோபாலபுரம் சாலை உள்ளிட்ட ஒரு சில சாலைகளில் உள்ள பள்ளங்களில் தண்ணீர் தேங்கி நின்றதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமப்பட்டனர். பலத்த காற்றுடன் மழை பெய்ததால் சில இடங்களில் உள்ள விளம்பர பதாகைகள் சாய்ந்தன. அதன்பிறகு பகல் 1.30 மணிக்கும் லேசான சாரல் மழை பெய்தது. அதுவும் 5 நிமிடத்துக்கு மேல் நீடிக்கவில்லை. இருப்பினும் தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வந்த நிலையில் நேற்று பெய்த மழை பொதுமக்களுக்கு சற்று ஆறுதலாக இருந்தது என்றே கூறலாம்.

## வெள்ளோடு சரணாலயத்துக்கு வெளிநாட்டு பறவைகள் வர தொடங்கின சுற்றுலா பயணிகள் உற்சாகத்துடன் பார்த்து ரசித்தனர்



வெள்ளோடு சரணாலயத்துக்கு வெளிநாட்டு பறவைகள் வர தொடங்கின. சுற்றுலா பயணிகள் பறவைகளை உற்சாகத்துடன் பார்த்து ரசித்தனர். வெள்ளோடு பறவைகள் சரணாலயம்

ஈரோடு அருகே வெள்ளோட்டில் பறவைகள் சரணாலயம் உள்ளது. இங்கு உள்ளூர் பறவைகள் மட்டுமின்றி வெளிநாட்டு பறவைகளும் தட்பவெட்ப சூழ்நிலைக்கு ஏற்ப சீசனின்போது வந்து செல்வது வழக்கம். பல்வேறு வகையான பறவைகள் தண்ணீரில் நீந்துவதையும், மரங்கள் மீது அமர்ந்து சத்தமிடுவதையும் பார்த்து ரசிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஈரோடு மாவட்டத்தில் மழை குறைவாக பெய்ததால் வெள்ளோடு சரணாலயத்தில் தண்ணீர் குறைவாக இருந்தது. இதனால் பறவைகள் குறைந்த அளவு மட்டுமே இருந்தன. தற்போது சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் சரணாலயம் முழுவதும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதையடுத்து பறவைகளின் வருகை அதிகரித்து உள்ளது.

சுற்றுலா பயணிகள்

வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் பெரிய நீர்காகம் பறவை அதிகமாக காணப்படுகிறது. மேலும், சிறிய நீர்காகம், பாம்புதரா, கிரேகராம், வெள்ளை அரிவாள் மூக்கன், ராமக்கோழி, லாத், கொசுஉள்ளான், தாழைக்கோழி, முக்குளிப்பான், ராக்கொக்கு உள்பட பல்வேறு வகையான பறவைகள் வெள்ளோடு சரணாலயத்தில் உள்ளன. அங்கு வெளிநாட்டு பறவைகளின் வருகையும் தொடங்கி உள்ளது.இந்த பறவைகளை கண்டு ரசிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வெள்ளோடு சரணலாயத்திற்கு வந்து செல்கின்றனர்.

வெளிநாட்டு பறவைகள்

இதுகுறித்து வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் உள்ள வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-பறவைகள் சரணாலயத்திற்கு தற்போது இலங்கையில் இருந்து பெரிய நீர்காகம் அதிக அளவில் வந்து உள்ளன. மேலும், இந்த மாதம் இறுதியில் சீசன் தொடங்கும். அப்போது இலங்கை, ஆஸ்திரேலியா, பெலிகான் உள்பட பல்வேறு வெளிநாடுகளில் இருந்து

பறவைகள் அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஒரு சில வெளிநாட்டு பறவைகளும் வந்து உள்ளன. பறவைகள் சரணாலயத்தை பார்த்து ரசிக்க சுற்றுலா பயணிகளுக்கு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அனுமதிக்கப்படுகிறது.ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி மாநிலம் முழுவதும் இருந்து சுற்றுலா பயணிகள் பறவைகளை பார்ப்பதற்காக வருகிறார்கள். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.7½ லட்சத்துக்கு வெற்றிலை விற்பனை



அந்தியூர் சந்தையில் ரூ.7½ லட்சத்துக்கு வெற்றிலை விற்பனை ஆனது.

வெற்றிலை விற்பனை

அந்தியூர் வாரச்சந்தையில் வாரம்தோறும் வெள்ளிக்கிழமை வெற்றிலை விற்பனை நடப்பது வழக்கம். அதன்படி நேற்று வெற்றிலை விற்பனை நடந்தது.

அந்தியூர் மற்றும் அதனை சுற்றியுள்ள எண்ணமங்கலம், சந்தியபாளையம், வெள்ளாளபாளையம், சங்கராபாளையம், கோவிலூர், வட்டக்காடு, பிரம்மதேசம், வேம்பத்தி, ஆப்பக்கூடல், குட்டிபாளையம், ஒரிச்சேரி

புதூர், புதுக்காடு, அத்தாணி உள்பட பல பகுதிகளில் இருந்தும் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் வெற்றிலைகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

ரூ.7½ லட்சம்

ஒரு வெற்றிலை கட்டில் மொத்தம் 100 வெற்றிலைகள் இருக்கும். இதில் ராசி ரக வெற்றிலை கட்டு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.70-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.80-க்கும் விற்பனை ஆனது. பீடா ரக வெற்றிலை கட்டு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.30-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.40-க்கும் விற்கப்பட்டது. செங்காம்பு ரக வெற்றிலை கட்டு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.5-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.10-க்கும் விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் ரூ.7½ லட்சத்துக்கு வெற்றிலை விற்பனை ஆனது. ஈரோடு, பெருந்துறை, கோபி, சத்தியமங்கலம், தர்மபுரி, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், சேலம் மாவட்டம் மேட்டூர், கர்நாடக மாநிலம் மைசூர் மற்றும் மாதேஸ்வரன் மலை ஆகிய பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் இங்கு வந்து வெற்றிலைகளை வாங்கி சென்றனர்.

## பைக்காராவில் குவிந்த சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்



ஊட்டி

தொடர் விடுமுறை காரணமாக ஊட்டி அருகே உள்ள பைக்காராவில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் அணையில் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.

<u>பைக்காரா</u>

ஊட்டியில் இருந்து கூடலூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது பைக்காரா. இங்கு நீர்வீழ்ச்சி, பைக்காரா அணை போன்றவை உள்ளன. பைக்காராவில் இருந்து அணைக்கு சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் வனப்பகுதிக்குள் செல்ல வேண்டும். அதே போல் நீர்வீழ்ச்சிக்கு 1 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். இந்த 2 பகுதிக்கும் வெவ்வேறு திசைகளில் செல்ல வேண்டும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை பைக்காராவில் இருந்து நீர்வீழ்ச்சிக்கு நடந்து தான் செல்ல வேண்டும். ஆனால் தற்போது சுற்றுலா பயணிகளுக்காக பேட்டரி கார் இயக்கப்பட்டு வருகிறது.

<u>சுற்றுலா பயணிகள் குவிந்தனர்</u>

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தொடர் விடுமுறை என்பதால் பைக்காராவில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் பைக்காரா அணையில் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். மேலும் நீர்வீழ்ச்சிக்கு சென்று அதன் அழகையும் கண்டு ரசித்தனர்.

சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் சாலையின் இருபுறமும் நிறுத்தப்பட்டதால், பைக்காராவில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாக விபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவானது. எனவே அங்கு வாகனங்கள் நிறுத்துவதை முறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

<u>பேட்டரி கார்</u>

இது குறித்து சுற்றுலா பயணிகள் கூறியதாவது:–

பைக்காரா அணையில் தண்ணீர் சுத்தமாக உள்ளதால் படகு சவாரி செய்வதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மேலும் இங்கு மிதிபடகு, துடுப்பு படகு உள்பட அதிவேக மோட்டார் படகுகளும் இயக்கப்படுகிறது. இந்த படகி தண்ணீரில் சீறிப்பாய்ந்து செல்வதை பார்ப்பதற்கு அழகாக உள்ளது.

மேலும் தற்போது சுற்றுலா பயணிகளின் வசதிக்காக பைக்காராவில் இருந்து நீர்வீழ்ச்சிக்கு செல்லும் பாதையில் பேட்டரி கார் இயக்கப்படுகிறது. இது வரவேற்கத்தக்க வகையில் உள்ளது. இதில் பயணம் செய்வது புதிய அனுபவத்தை தருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

<u>7500 பேர்</u>

இது தொடர்பாக வனத்துறையினர் கூறியதாவது:–

பைக்காரா அணையில் தற்போது தண்ணீர் குறைவாக உள்ளது. இதனால் இங்கு வரும் அனைத்து சுற்றுலா பயணிகளும் அணை படிக்கட்டுகள் வழியாக கீழே இறங்கி படகு சவாரி செய்ய விரும்புவது இல்லை.

ஆயுதபூஜை, விஜயதசமி என தொடர் விடுமுறை நாட்களில் சுமார் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பைக்காரா அணைக்கு வந்தனர். ஆனால் அவர்களில் 7 ஆயிரத்து 500 பேர் மட்டுமே படகுசவாரி செய்தனர். இங்குள்ள தண்ணீர் மற்றும் அணையின் அழகு சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## நீலகிரி வடக்கு கோட்டத்தில் 1 லட்சம் மரக்கன்றுகள் தயார் வனத்துறை அதிகாரி தகவல்



ஊட்டி,

நீலகிரி வடக்கு கோட்டத்தில் 1 லட்சம் நாற்றுகள் தயார் நிலையில் உள்ளன என்று வன அதிகாரி பத்ரசாமி கூறினார்.

விளக்கம்

நீலகிரி மாவட்டத்தில் வடக்கு, தெற்கு, கூடலூர், முதுமலை போன்ற வனக்கோட்டங்கள் உள்ளன. இந்த வனக்கோட்டங்களுக்குட்பட்ட வனப்பகுதிகள் மட்டுமின்றி மற்ற பகுதிகளும் பசுமையாக இருக்க வனத்துறையினர் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி வனத்துறையினர் சார்பில் பொதுமக்களுக்கு, பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன. இவற்றை வனத்துறையினர் நட்டு வைப்பதுடன், எப்படி பராமரிப்பது என்பது குறித்தும் விளக்கம் அளித்து வருகிறார்கள்.

1 லட்சம் மரக்கன்றுகள்

இந்த நிலையில் நீலகிரி வடக்கு வனக்கோட்டத்துக்குட்பட்ட நாற்றுப்பண்ணையில் ஏராளமான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து வடக்கு கோட்ட வன அதிகாரி பத்ரசாமி கூறியதாவது:–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 67 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன. இதையொட்டி நீலகிரி வடக்கு வனக்கோட்டம் சார்பில் 2 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டது. ஆனால் 1 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

மீதமுள்ள 1 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக நாற்றுப்பண்ணையில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் தயார்படுத்தும் பணி நடந்து வருகிறது. தற்போது 1 லட்சம் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளன.

சாலையோரம் நடவு

இந்த மரக்கன்றுகள் பள்ளி, கல்லூரி வளாகங்கள், வணிக வளாகங்கள், வீடுகள், சாலையோரம் உள்பட பல்வேறு இடங்களில் நடவு செய்யப்பட உள்ளன. பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படுவதுடன், வனத்துறையினரே மரக்கன்றுகளை நடவு செய்வார்கள். மேலும் மரக்கன்றுகளை பராமரிப்பது குறித்து விளக்கமும் அளிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வில் சிக்கல்



தேனி

முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் நீர்மட்டம் உயர்வதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்து மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தமிழக–கேரள மாநில எல்லையில் முல்லைப் பெரியாறு அணை அமைந்து உள்ளது. இந்த அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீர்ஆதாரமாக திகழ்கிறது. இந்த அணையின் மொத்த உயரம் 152 அடி ஆகும். கடந்த 1979–ம் ஆண்டு நீர்மட்டம் 152 அடியில் இருந்து 136 அடியாக குறைக்கப்பட்டது. இந்த அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது. இந்த வழக்கில், அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த கடந்த ஆண்டு மே மாதம் 7–ந்தேதி உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. மேலும் பேபி அணையை பலப்படுத்திவிட்டு நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தலாம் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டது.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த தீர்ப்போடு, கடந்த ஆண்டு மழைப்பொழிவும் நல்ல நிலையில் இருந்ததால் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடர்ந்து மழைப்பொழிவு இருந்தது. இதனால் அக்டோபர் 31–ந்தேதி பிற்பகலில் அணையின் நீர்மட்டம் 136 அடியை கடந்தது. 35 ஆண்டுகளுக்கு பிறகு நீர்மட்டம் 136 அடிக்கு மேல் தேக்கி வைக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மழைப்பொழிவு இல்லை

தொடர்ந்து பலத்த மழை பெய்ததால் நவம்பர் மாதத்தில் நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்தது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் இருபோக நெல் சாகுபடி வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அதேபோன்று இந்த ஆண்டும் தென்மேற்கு பருவமழை தொடங்கிய போது அணைக்கு நீர்வரத்து அதிக அளவில் இருந்ததால், விவசாயிகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டும் நீர்மட்டம் 142 அடியை எட்டும் என்று விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர்.

ஆனால் விவசாயிகள் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றம் அளிக்கும் வகையில் பருவமழை தீவிரம் அடையாம் உள்ளது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடர்ந்து பெரும்பாலான நாட்களில் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. இதனால் நீர்மட்டம் வேகமாக உயர்ந்த வண்ணம் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழைப் பொழிவு இல்லை. இதனால் நீர்மட்டம் உயர்வதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

நீர்மட்ட நிலவரம்

கடந்த ஆண்டு அக்டோபர் 25–ந்தேதி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 130.20 அடியாக இருந்தது. ஆனால் அதே தேதியான நேற்று அணையின் நீர்மட்டம் 119 அடியாக தான் இருந்தது. எதிர்பார்த்த அளவுக்கு இந்த ஆண்டு மழைப்பொழிவும் இல்லை. அணைக்கு நேற்று வினாடிக்கு 725 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 511

கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையில் 2 ஆயிரத்து 448 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

வரும் நாட்களில் பலத்த மழைப்பொழிவு ஏற்பட்டு, அணையின் நீர்மட்டம் இந்த ஆண்டும் இலக்கை எட்ட வேண்டும் என்பதற்காக விவசாயிகள் பல்வேறு வழிபாடுகளை நடத்தத் தொடங்கி உள்ளனர். நீர்மட்டம் உயர்ந்தால் தான் 2–ம் போக நெல் சாகுபடியை தொடங்க முடியும் என்ற நிலையில் மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி எடுக்க வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கலெக்டர் தலைமையில் நடந்தது**



திருவள்ளூர்,

திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி எடுக்க வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் நடந்தது.

<u>ஆலோசனை கூட்டம்</u>

திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் வடகிழக்கு பருவமழையையொட்டி எடுக்க வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதை தொடங்கி வைத்து கலெக்டர் கூறியதாவது:–

ஒவ்வொரு தாசில்தாரும் தங்களது வட்டதிற்குட்பட்ட பேரிடர் தாக்குதலுக்குள்ளாகும் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை தங்கவைக்க பாதுகாப்பான இடங்களை தேர்வு செய்து வைத்து கொள்ள வேண்டும். மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினர் பாதுகாப்புக்கு தேவையான உபகரணங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

<u>அபாய நிலைகளை சமாளிக்க</u>

நீர் வள ஆதார அமைப்புகளில் உள்ள பழுதுகளை உடனுக்குடன் நீக்க வேண்டும். அணைக்கட்டுகளில் வந்து சேரக்கூடிய நீரின் அளவு மற்றும் அதனை வெளியேற்றுதல் மற்றும் கூடுதலாக தண்ணீர் வெளியேற்றுவதால் ஏற்பட கூடிய அபாய நிலைகளை சமாளிக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆராய வேண்டும்..பேரிடர் நேரங்களில் மரங்கள் விழுந்து பாதிப்பு ஏற்பட்டால் அவற்றை அகற்ற அறுக்கும் கருவிகளை கூடுதலாக வைத்திருக்க வேண்டும். 108 ஆம்புலன்ஸ் வசதிகள் நல்ல முறையில் உள்ளதா என்று உறுதி செய்ய வேண்டும். பேரிடர்கள் பெரும்பாலும் கடற்கரையோர மக்களையே அதிகம் தாக்க வாய்ப்புகள் உள்ளதால் மீன் வளத்துறையினர் விழிப்புடன் இருக்க வேண்டும். பேரிடர் காலங்களில் கால்நடை பராமரிப்புத்துறை, மின்சார வாரியம், போக்குவரத்து துறை உள்ளிட்ட அரசு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, சப்–கலெக்டர் ராகுல்நாத், ஆர்.டி.ஓ.க்கள், தாசில்தார்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

## ஆர்ஆர்ஆர் திட்டத்தில் நிதி ஒதுக்க மத்தியஅரசு மறுப்பு

# நீர், நிலவள திட்டத்தில் ஏரிகளை சீரமைக்க ரூ. 2,700 கோடி நிதி கேட்க அரசு முடிவு



சென்னை: திட்ட அறிக்கை தாக்கல் செய்ய தாமதம் செய்ததன் காரணமாக ஆர்ஆர்ஆர் திட்டத்தின் கீழ் 5,763 ஏரிகளை சீரமைக்க மத்திய அரசு நிதி ஒதுக்க மறுத்தது. இந்த நிலையில், நீர்வள, நிலவள திட்டத்தின் மூலம் இதற்கான பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித்துறை முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் உள்ள வறட்சி மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்குவதற்காக மத்திய அரசு நீர்நிலைகளை சீரமைத்து, புனரமைக்கும் திட்டத்தை (ஆர்ஆர்ஆர்) கொண்டு வந்தது. இந்த திட்டத்தின் மூலம் கடந்த 2013ல் தமிழகம் முழுவதும் 5,763 ஏரிகளை சீரமைக்க முடிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து, இந்த திட்டத்திற்கான பணிகளை உடனடியாக

பொதுப்பணித்துறை தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், திட்ட அறிக்கை தயாரிப்பதில் தமிழக பொதுப்பணித்துறை இழுத்தடித்து வந்தது. குறிப்பாக, கடந்த சில தினங்களுக்கு முன்புதான் 400 ஏரிகளை சீரமைக்கும் பணிக்கான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையத்திடம் தாக்கல் செய்தது. இந்நிலையில், மிகவும் தாமதமாக திட்ட அறிக்கை தாக்கல் செய்ததாக கூறி, மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்க மறுத்து விட்டது. இதுதொடர்பாக, தலைமை செயலாளர் தரப்பில் பொதுப்பணித்துறையில் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியதால் இந்த பிரச்னை விஸ்வரூபம் எடுத்தது. தற்போது மீண்டும் நீர்வள நிலவள திட்டத்தினை தொடங்கி, அதன்மூலம் 5 ஆயிரம் ஏரிகளின் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள பொதுப்பணித்துறை முடிவு செய்துள்ளது. இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறும் போது, சமீபத்தில் ெபாதுப்பணித்துறை முதன்ைம தலைமை பொறியாளர் திருமாறன் தலைமையில் நான்கு மண்டல நீர்வளத்துறை தலைமை பொறியாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மீண்டும் நீர்வள நிலவள திட்டத்தினை தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசிடம் நிதி கோரப்படுகிறது. நீர்வளநிலவள திட்டத்திற்காக ரூ.2,700 கோடி நிதி கேட்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஏரிகள் சீரமைக்கப்பட உள்ளன. தற்போது திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வரும் நிலையில் விரைவில் இந்த திட்டத்தின் கீழ் நிதியை பெற பொதுப்பணித்துறை அரசு செயலாளர் தலைமையிலான குழு டெல்லி செல்கிறது என்றார்.

**உணவு பொருட்கள் விற்கும் நிறுவனங்கள்: புதிய உத்தியை கடைப்பிடிப்பு**



பதப்படுத்திய உணவு பொருட்கள் விற்கும் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய வழக்கமான விளம்பரத்துக்கு மாற்றாக புதிய உத்தியை கடைப்பிடிக்கின்றன. அதாவது, தங்கள் தயாரிப்பில் கலப்படமோ, நச்சுப் பொருட்களோ எதுவும் இல்லை. அளவுக்கு அதிகமாக எதுவும் பயன்படுத்தப்படவில்லை. உடலுக்கு நன்மை அளிப்பது என்ற ரீதியில் தயாரிப்புகளை முன்னிலைப்படுத்த துவங்கியுள்ளன.

**பதப்படுத்தப்பட்ட பாக்கெட் அசைவ உணவு ஆபத்து**



நியூயார்க்: பதப்படுத்தப்பட்டு பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்யப்படும் மாமிச வகை உணவுகள் ஆபத்தானது; புற்றுநோய் வர வாய்ப்பை அதிகரிக்கிறது; இதனால் இதை வெளிப்படையாக அறிவிக்க உலக சுகாதார நிறுவனம் முடிவு செய்துள்ளது. புகைக்கும் சிகரெட்டை விட, பதப்படுத்தப்பட்ட பாக்கெட் மாமிசம், பெரும் ஆபத்தை விளைவிக்கும். சமீபத்தில் எடுக்கப்பட்ட சர்வவேயில் இந்த தகவல்கள் வெளியாயின. அதனால், பதப்படுத்தப்பட்ட பாக்கெட் மாமிசம், உடலுக்கு கேடு விளைவிக்க கூடியது மட்டுமல்ல, புற்றுநோய் வர வாய்ப்பை அதிகரிக்கிறது என்று அறிவிக்க திட்டமிட்டுள்ளோம். இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என்றும் உலக சுகாதார அமைப்பின் அதிகாிகள் தெரிவித்தனர்

**விதை நேர்த்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

புதுச்சேரி, : திருக்காஞ்சி கீழ்அக்ரகாரம் பகுதி விவசாயிகளுக்கு நல்விதை பிரித்து எடுத்தல், சம்பா பருவத்தில் விதை நேர்த்தி செய்வது முதல் நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் வராமல் தடுக்க வேண்டிய முறைகள் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. திருக்காஞ்சி உழவர் உதவியகத்தில் நடந்த இந்நிகழ்ச்சியில் காரைக்கால் வேளாண் கல்லூரி மாணவிகள் அபிநயா, விதுபிரியதர்ஷினி, வித்யாலட்சுமி, விஜயலட்சுமி, விமலா, விஷ்ணுபிரியா, நிவேதா, சஸ்மிதா ஆகியோர் பங்கேற்று செயல்விளக்கம் அளித்தனர். வில்லியனூர் துணை வேளாண் இயக்குனர் முருகேசன் ஆணைப்படி, திருக்காஞ்சி உழவர் உதவியகம் வேளாண் அலுவலர் கோகுலலட்சுமி அறிவுறுத்தல்படி இம்முகாம் நடந்தது.

**தென் மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்**



சென்னை - வளிமண்டலத்தில் நீடிக்கும் மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் தென் மாவட்டங்களில் இன்று மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை ஓரிரு நாட்களில் தொடங்கவிருக்கும் நிலையில் தென்மாவட்டங்களில் மழை தீவிரம் அடைந்து வருகிறது.

குறிப்பாக தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதையொட்டி உள்ள இலங்கை, கன்னியாகுமரி கடல் பகுதியில் கடந்த சிலநாட்களாகவே வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி உருவானது. இதனால் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்தது. தற்போது இந்த சுழற்சி அதே இடத்தில் நீடிப்பதால் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதுகுறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள இலங்கை கடற்பகுதியில் உருவாகியிருந்த மேல் அடுக்கு சுழற்சி தொடர்ந்து நீடித்து வருகிறது.

தமிழ்நாட்டில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை

பெய்தது.அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் சுருளோடு 7 சென்டி மீட்டர், தூத்துக்குடி, இரணியல் 4, சென்னை, நுங்கம்பாக்கம், ஸ்ரீவைகுண்டம், தக்கலை, கேளம்பாக்கம் 2, ராமேசுவரம், மதுராந்தகம், பாம்பன், அண்ணாபல்கலைக்கழகம், மகாபலிபுரம் 1 சென்டி மீட்டர் என்று மழை பதிவாகி உள்ளது.அடுத்த 24 மணிநேரத்தில் வடமாநிலங்களில் ஓரிரு இடங்களிலும், தென் மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிலும் குறிப்பாக தென் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

இதனால் தென்மேற்கு வங்க கடலில் வரும் இன்று 26-ந்தேதி புதிய ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உதயமாகும்.அது வரும் 27-ந் தேதி வடக்கு நோக்கி நகரும் போது கடல் கொந்தளிக்கும் நிலை ஏற்பட வாய்ப்பிருப்பதால், மீனவர்கள் கவனமாக இருக்க வேண்டும். மேல் அடுக்கு சுழற்சியால் தமிழகத்தில் மழை தொடரும். சென்னையில் வானம் மேகம் மூட்டத்துடன் காணப்படும். அவ்வப்போது மழை பெய்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## சென்னையில் 1 லட்சம் வீடுகளில் மாடித் தோட்டம் திட்டத்தை விரிவாக்க முடிவு



கோப்புப் படம்

சென்னையில் 1 லட்சம் வீடு களுக்கு மாடித் தோட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்காக வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத்துறைக்கு நவம்பரில் புதிய அலுவலர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

தமிழகத்தில் இயற்கை விவசா யம் மூலம் விளைவிக்கப்படும் ஆர் கானிக் காய்கறிகளுக்கு வரவேற்பு அதிகரித்தது. இதை தொடர்ந்து, வேளாண்துறையின் பிரிவான தோட்டக்கலைத் துறை சார்பில் சென்னையில் மாடித் தோட்டம் திட் டம் சில ஆண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாடித்தோட்டம் குறித்த பயிற்சி யுடன் தோட்டம் அமைப்பதற்கான பிளாஸ்டிக் பைகள், விதைகள், தண்ணீர் தெளிக்கும் ஜாடி உள்ளிட்டவற்றை ரூ.1400 என்ற விலையில் வழங்கியது.

தோட்டக்கலைத் துறையில் அலுவலர்கள் பற்றாக்குறையால், பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய முடியாமல், திட்டம் முடங்கியது.

இந்நிலையில்தான், மாடித்தோட் டம் திட்டத்தை விரிவுபடுத்துவது தொடர்பான அறிவிப்பை சமீபத்தில் சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டார்.

முதல் கட்டமாக சென்னையில் திட்டத்தை வேளாண்துறை விரிவு படுத்துகிறது. அடுத்தடுத்து கோவை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை கொண்டு செல்லவும் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக வேளாண்துறை உயர் அதிகாரி ஒருவர் ‘தி இந்து’ விடம் கூறியதாவது:

சென்னையில் தற்போது 15 ஆயி ரம் வீடுகளில் மட்டுமே மாடித்தோட் டம் உள்ளது. முதல்வர் அறிவிப்பை தொடர்ந்து முதல்கட்டமாக சென்னையில் 1 லட்சம் வீடுகளை இலக்காக கொண்டு புதிய திட்டம் வகுத்துள்ளோம்.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 500 பூங்காக்களில் முக்கிய பகுதிகளில் உள்ள 100 பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மூலம் மாடித் தோட்டத்திற்கான ‘கிட்’ மக்களுக்கு ரூ.500 மதிப்பில் வழங்கப்படும்.

கீரை, காய்கறி விதைகள், தென்னை நார் உள்ளிட்ட பொருட் கள் ஒப்பந்தங்கள் மூலம் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது.

நவம்பர் முதல் வாரத்தில் வேளாண்துறை, தோட்டக்கலைத் துறைக்கான ஆட்கள் தேர்வு செய்வதற்கான பணிகள் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## திடீரென குவியும் ரூ.40 ஆயிரம் கோடி திட்டங்களால் ‘தண்ணி இல்லா காடு’ ராமநாதபுரம் வளம் பெறுமா?



தண்ணி இல்லா காடு என அழைக்கப்படும் ராமநாதபுரம் மாவட்டத்துக்கு மத்திய, மாநில அரசுகள் அடுத்தடுத்து ரூ.40 ஆயிரம் கோடிக்கு மேலான திட்டங்களை அறிவித்து இம்மாவட்ட மக்களை திக்குமுக்காட செய்துள்ளன. இத்திட்டங்கள் அனைத்தும் நிறைவேறினால் தங்கள் மாவட்டம் செல்வச் செழிப்போடு தொழில் வளம் மிக்கதாக மாறிவிடும் என பெரும் கனவோடு இம்மாவட்ட மக்கள் காத்திருக்கின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது அடங்கியுள்ள திருவாடானை, பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர், ராமநாதபுரம், ராமேசுவரம் ஆகிய வட்டங்கள் அடங்கிய ராமநாதபுரம் சீமை 15-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் பாண்டிய நாட்டு அரசின் கீழ் இருந்துவந்தது. இப்பகுதி கி.பி.1063-ல் சிறிது காலம் சோழநாட்டு மன்னர் ராஜேந்திர சோழனால் ஆட்சி செய்யப்பட்டது. கி.பி.1520-ம் ஆண்டில் பாண்டிய மன்னர்களிடமிருந்து விஜயநகர மன்னர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இப்பகுதிகள் கொண்டுவரப்பட்டு, 200 ஆண்டுகள் அவர்களது ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. 1892-ல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டு ஆங்கி லேயே அரசு மாவட்ட ஆட்சியரை நிர்வாகப் பணிகளுக்காக நியமனம் செய்தது.

**ராமநாதபுரம் மாவட்டம் உதயம்**

1910-ம் ஆண்டில் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் சில பகுதிகளைச் சேர்த்து ராமநாதபுரம் மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் ‘ராம்நாட்’ என்று அழைக்கப்பட்டு, பின்னர் ராமநாதபுரம் மாவட் டம் எனப் பெயரிடப்பட்டது.

15.3.1985-ம் ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது. திருப்பத் தூர், காரைக்குடி, தேவகோட்டை, சிவகங்கை, மானாமதுரை, இளையான்குடி ஆகிய வட்டங் களை உள்ளடக்கிய ‘ பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டம்’ தோற்றுவிக்கப்பட்டு பின்னர் சிவகங்கை மாவட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திருவில்லிபுத்தூர், விருதுநகர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, சாத்தூர், ராஜபாளையம் ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய 'காமராஜர் மாவட்டம்' எனத் தோற்றுவிக்கப்பட்டு, விருதுநகர் மாவட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திருவாடானை, பரமக்குடி, கமுதி, முது குளத்தூர், ராமநாதபுரம், ராமேசுவரம் ஆகிய வட்டங்களை உருவாக்கி தற்போதைய ராமநாதபுரம் மாவட்டம் உருவாக்கப்பட்டது. 1.9.1998-ல் திருவாடானை வட்டத்தைச் சேர்ந்த 29 வருவாய் கிராமங்கள் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டத்துடன் இணைக்கப்பட்டன. தற்போது ராமநாதபுரம் வட்டம் ராமநாதபுரம், கீழக்கரை என 2 ஆகப் பிரிக்கப்பட்டது.

**மாவட்ட நிர்வாக அமைப்பு**

வருவாய்க் கோட்டங்கள் 2, வட்டங்கள் 8, உள்வட்டங்கள் 38, வருவாய் கிராமங்கள் 400, ஊராட்சி ஒன்றியம் 11, கிராம ஊராட்சிகள் 429, நகராட்சிகள் 4, பேரூராட்சிகள் 7, நாடாளுமன்ற தொகுதி 1, சட்டப்பேரவை தொகுதிகள் 4, மாவட்ட ஊராட்சி 1. மொத்த மக்கள் தொகை 13 லட்சத்து 53 ஆயிரத்து 445, மாவட்டத்தின் பரப்பளவு 4 ஆயிரத்து 175 சதுர கி.மீ. எப்போதும் வறண்டு காணப்படும் வைகையும், குண்டாறும் இம்மாவட்டத்தின் ஆறுகள். மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலைகள் 8, சிறு தொழிற்சாலைகள் ஆயிரத்து 500 மற்றும் 4 ஆயிரத்து 500 குறுந்தொழில்கள் உள்ளன.

விவசாயத்துக்கு அடுத்து சிறு தொழில்களாக மின்சார உதிரிபாகங்கள் தயாரித்தல், மாவு, நெல் அரைக்கும் ஆலைகள், ஐஸ்கட்டி தயாரித்தல், மீன்பதனிடும் தொழில்கள், உப்பு உற்பத்தி, பேவர் பிளாக் மற்றும் ஹாலோ பிளாக் தொழில்கள் உள்ளன. இருந்தபோதும் பெரிய தொழில் வளம் இல்லாததால் இங்குள்ள மக்கள் வெளியூர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பு தேடிச் செல்லும் நிலை உள்ளது.

**உவர்ப்பாக மாறிய நிலத்தடி நீர்**

மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடல்நீர் ஊடுருவலால் குடிநீர், விவசாயத்துக்கு நீர் கிடைப்பது தலையாய பிரச்சினையாக உள்ளது. போதிய மின்சார வசதியும் இல்லை. குடிக்கக்கூட நீர் கிடைக்காததால் 'தண்ணி இல்லா காடு' என்ற பெயர்களில் இது அழைக்கப்படுகிறது. வளர்ந்து வரும் மாவட்டமாக இருந்தாலும், தேசிய திட்டக் குழுவில் இன்னும் பின்தங்கிய மாவட்ட அட்டவணையில் உள்ளது.

கடந்த 1998-ம் ஆண்டு தெற்கு ஆசியாவிலேயே பெரிய திட்டமாக கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் நரிப்பையூரில் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் மூலம் கடலாடி, முதுகுளத்தூர், கமுதி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது. இத்திட்டம் உள்ளிட்ட பல குடிநீர் திட்டங்கள் மூலம் மாவட்ட குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை.

**காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்**

ஒட்டுமொத்த மாவட்டத்தின் குடிநீர் பிரச்சி னையைத் தீர்க்க ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் (காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்) தீட்டப்பட்டது. 3 மாவட்டங்களுக்கு பயனளிக்கும் இத்திட்டம் ரூ.616 கோடியில் திருச்சி அருகே முத்தரசநல்லூர் காவிரி ஆற்றிலிருந்து ராட்சத ஆழ்துளை கிணறுகள் அமைத்து குடிநீர் கொண்டுவரப்பட்டது. கடந்த 2009-ம் ஆண்டு திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.

தொடங்கிய 3 ஆண்டுகள் போதிய குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. கூடுதல் குழாய்கள், பழுதடைந்த குழாய்களை மாற்றுதல் போன்ற முறையான பராமரிப்பு இல்லாததால் மாவட்டத்தின் பல நூறு கிராமங்களுக்கு குடிநீர் சென்றடையவில்லை.

வழியில் பல இடங்களில் குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகி வருகிறது. இதை போர்க்கால அடிப்படையில் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் சரி செய்ய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**கிழக்கு கடற்கரைச் சாலை**

கிழக்கு கடற்கரை சாலையானது புதுக் கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்கள் வழி யாக தூத்துக்குடியைச் சென்றடைகிறது. தற்போது இருவழியாக உள்ள இச்சாலையை நான்குவழிச் சாலையாக்க அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் ராமநாதபுரம், சிவ கங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் தொழில் வளங்கள் பெருகும். புதிய தொழிற்சாலைகள் உருவாகும்.

மதுரை - தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை 49-ல் மதுரையிலிருந்து பரமக்குடி வரை நான்கு வழிச் சாலையாகவும், பரமக்குடியிலிருந்து தனுஷ் கோடி வரை சாலை விரிவாக்கமும் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவேறி னால் ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் தொழில் வளம் பெருக வாய்ப்புள்ளது.

ராமேசுவரம், தேவிபட்டினம், திருப்புல்லாணி, ஏர்வாடி தர்ஹா, ஓரியூர் சர்ச் போன்ற புனித தலங்களும், அரியமான் மற்றும் ஓலைக்குடா, தனுஷ்கோடி கடற்கரைகளும் யாத்ரீகர்கள், சுற்றுலா பயணிகளைக் கவர்கின்றன. அதனால் சுற்றுலாவை மேம்படுத்த நீர்ச்சறுக்கு விளை யாட்டுகள், படகு சவாரிகள், உள்நாட்டு, வெளி நாட்டு கப்பல் போக்குவரத்தை ராமேசுவரத்தில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மதுரை - ராமேசுவரம் நான்குவழிச் சாலை, கிழக்கு கடற்கரைச் சாலை நான்கு வழிச்சாலை, காரைக்குடி - தூத்துக்குடி புதிய ரயில் பாதை போன்ற திட்டங்கள் பயன்பாட்டுக்கு வந்தால் போக்குவரத்து வசதி மேம்படலாம்.

**ரூ. 40 ஆயிரம் கோடி திட்டங்கள் அறிவிப்பு**

கடந்த மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.47 கோடி மதிப்பில் 73 பேர் சிறு, குறுந் தொழில்கள் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளனர்.

மேலும் சைமா நிறுவனம் ரூ. 500 கோடியில ஜவுளி உற்பத்தி நிறுவனம் அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளது. இதுமட்டுமல்லாமல், திருவாடானை வட்டம் உப்பூரில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்

கழகத்தின் மூலம் 800 மெகாவாட் திறன் கொண்ட 2 அனல் மின் உற்பத்தி நிலையம் (1600 மெகாவாட்) அமைக்கப்பட உள்ளது. ரூ. 9600 கோடி மதிப்பில் 912 ஏக்கரில் சூப்பர் கிரிடிக்கல் தொழில்நுட்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி மூலம் மின் உற்பத்தி செய்யப்பட உள்ளது.

கடந்தாண்டு சட்டப்பேரவை கூட்டத்தில் ரூ.5 ஆயிரம் கோடி மதிப்பில் காவிரி- வைகை- குண்டாறு இணைப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது. கடலாடி அருகே கொண்டுநல்லான்பட்டியில் 3 ஆயிரம் ஏக்கரில் ரூ.24 ஆயிரம் கோடியில் தேசிய அனல்மின் கழகம் (என்டிபிசி நிறுவனம்) அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

கமுதி வட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கரில் 3 ஆயிரம் மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்தை அதானி குழுமம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக கமுதி அருகே புதுக்கோட்டை உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு ரூ.5 ஆயிரத்து 40 கோடி மதிப்பில் மின் உற்பத்தி மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்தாண்டு ரூ.1000 கோடி மதிப்பில் தொண்டி அருகே கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை அமைக்க இருப்பதாக அரசு அறிவித்தது. இது அறிவிப்பாகவே உள்ளது.

தற்போது நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட் டத்தில் திருவாடானையில் ரூ.150 கோடியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என முதல்வர் அறிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.40 ஆயிரம் கோடிக்கும் மேலான திட்டங்களை தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், 6 ஆயிரம் பேர் நேரடியாகவும், 10 ஆயிரம் பேருக்கு மேல் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர்.

**சிவகங்கை, புதுக்கோட்டை பலனடையும்**

இதில் பெரும்பாலான திட்டங்கள் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களை இணைக்கும் வகையில் உள்ளன. இரண்டு மாவட்டங்களும் ராமநாதபுரம் மாவட்டத்தின் அருகிலுள்ள எல்லைகளாக உள்ளதால் இந்த மாவட்டங்களும் தொழில், போக்குவரத்து, சுற்றுலா வசதிகளில் மேம்படும்.

வேறு எந்த மாவட்டத்துக்கும் இல்லாத திடீர் முக்கியத்துவம் ராமநாதபுரம் மாவட்டத்துக்கு கிடைத்துள்ளது. இதை அறிவிப்போடு நிறுத்தி விடாமல், விரைவாக நிறைவேற்றி தருவது அரசின் கையில்தான் உள்ளது._

**கிடப்பில் உள்ள சேதுசமுத்திர திட்டம்**

இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கரைக்கு இடையே உள்ள கடல் தூரத்தை குறைக்கவும், இலங்கையை சுற்றி செல்லாமல், இந்திய கடல் எல்லைக்குள் கப்பல் பயணத்தை மேம்படுத்தவும், மன்னார் வளைகுடாவை பாக் விரிகுடாவுடன் இணைத்து 'சேது சமுத்திர கப்பல் கால்வாய் திட்டம்' உருவாக்கப்பட்டது. இந்தியா விடுதலைக்கு முன் 1860 முதல் 1922 வரை ராமேசுவரம் தீவு வழியாக கால்வாய் உருவாக்க 9 திட்டங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

விடுதலைக்குப்பின் 1956-ல் இத்திட்டம் முன்வைக்கப்பட்டது. அதிலிருந்து தொடர்ந்து 1997-ல் இத்திட்டத்தை நிறைவேற்றும் நிறுவனமாக தூத்துக்குடி துறைமுகம் அறிவிக்கப்பட்டது. பல்வேறு அறிக்கைகள், சுற்றுச்சூழல் சான்றுகளுக்கு பின், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, ரூ.2 ஆயிரத்து 233 கோடியில் நிறைவேற்ற 2004-ல் இத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்டியது.

அடிக்கல் நாட்டி, நாகப்பட்டினம், ராமேசுவரம் பகுதிகளில் கால்வாய் வெட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்றன. அதில் ஆதம்பாலத்தை (ராமர் பாலம்) உடைத்து திட்டத்தை நிறைவேற்றக்கூடாது எனவும், மாற்றுப்பாதையில் செயல்படுத்த வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதால் திட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ராமநாதபுரம், சிவகங்கை,

புதுக்கோட்டை உள்ளிட்ட தென்மாவட்டங்கள் பல்வேறு வகையில் வளர்ச்சி அடைந்திருக்கும்.

**காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு**

**எஸ்.ஜெகதீசன் (ராமநாதபுரம் மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர்)**

ராமநாதபுரம் மாவட்டம் வளர்ச்சி பெற பல பெரிய திட்டங்களை முதல்வர் அறிவித்துள்ளார். இத்திட்டங்களை செயல்படுத்தும்போது வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். சென்னையைப் போல் ராமநாதபுரத்துக்கும் கார் தொழிற்சாலை உள்ளிட்ட பிற தொழிற்சாலைகள் வர முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.2.36 லட்சம் கோடி அந்நிய முதலீடு கிடைப்பதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதில் தென்மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்துக்கு அதிக முன்னுரிமை அளித்து தொழில்களை கொண்டுவர வேண்டும். மதுரை-ராமேசுவரம் நான்குவழிச் சாலை திட்டத்தை ராமநாதபுரம் வரை நீட்டிக்க முதல்வர் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

**ஏ.முஜிபுர் ரஹ்மான், (ராமநாதபுரம் இளம்தொழில் முனைவோர் பயிற்சி மைய முன்னாள் தலைவர்)**

பின்தங்கிய ராமநாதபுரம் மாவட்டத்தை தொழில் வளப்படுத்த வேண்டும் என்று அரசின் பார்வை பட்டுள்ளதை வரவேற்கிறோம். மாவட்டத்தில் தொழில்கள் தொடங்க நிலங்கள் குறைவான விலையில் கிடைக்கின்றன. இலங்கையில் சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளதால், வர்த்தகம், வேலைவாய்ப்புக்கு இலங்கை மக்கள் இங்கு வர வாய்ப்புள்ளது. மாவட்டத்தில் குடிநீர், கிழக்கு கடற்கரை சாலை, அகல ரயில் பாதை, நான்குவழிச் சாலை, வழுதூரைச் சுற்றி மின்திட்டங்கள் போன்றவை மாவட்டத்தில் போக்குவரத்து, வர்த்தகத்துக்கு வழிவகுத்துள்ளன. தொழில்களுக்கு மின்சாரம் அவசியம். அதனால் ராமநாதபுரம்

மாவட்டத்துக்கு பெரிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் அறிவிப்போடு நின்றுவிடாமல் வந்துவிடும் என நம்புகிறோம்.

**அஸ்மாபாக் அன்வர்தீன்,**

**(ராமநாதபுரம் மாவட்ட தொழில், வர்த்தக சங்கத் தலைவர்)**

மாவட்டத்துக்கு பெரிய மின் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். கொள்கை அளவில் இல்லாமல் நீண்ட கால திட்டங்களாக இருந்தாலும், இவற்றை அறிவித்தபடி செயல்படுத்த வேண்டும். எந்த தொழில் என்றாலும், அதற்கு மின்சாரம் அவசியமானது. இந்த மின் திட்டங்களால் 2 அல்லது 3 ஆண்டுகளில் முழு பயனும் கிடைக்கும். மின்சாரம் கிடைத்தால் அனைத்து தொழில்களும் அபரிமிதமான வளர்ச்சி பெறும். கிழக்கு கடற்கரைச் சாலையை நான்குவழி சாலையாக்கினால் தொழில்வளம் பெறும். ஆங்கிலேயர் காலத்தில் ஆய்வு செய்யப்பட்ட, காரைக்குடி- தூத்துக்குடி ரயில்பாதையை அமைக்க வேண்டும். இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

**சோழாந்தூர் பாலகிருஷ்ணன்,**

**(ஆர்.எஸ்.மங்கலம் பாசன கண்மாய்கள் சங்கத் தலைவர்)**

ராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பூர் மின் திட்டத்துக்கு விவசாயிகளுக்கு பாதிப்பின்றி நிலங்களை கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் அறிவித்துள்ள பெரிய அளவிலான மின்சாரத் திட்டங்கள், புதிய தொழிற் திட்டங்கள் வெறும் அறிவிப்போடு நின்றுவிடக் கூடாது. அத்திட்டங்களை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்தினால் ராமநாதபுரம் மாவட்டம் பல்வேறு வகைகளில் வளர்ச்சி அடையும். மக்களின் வாழ்வாதாரமும் மேம்படும். தமிழகத்தின் 2-வது பெரிய கண்மாயான ஆர்.எஸ். மங்கலம்

கண்மாயை ஆழப்படுத்தி, அணையைக் கட்டி இம்மாவட்டத்தில் விவசாயம் செழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## இயற்கைக்கு மாறுவோம்: விவசாயம் தழைக்க பெரம்பலூரின் மாற்று வழி!



'_எங்கே பிரச்சினை இருக்கிறதோ, அங்கே இருந்துதான் அதற்கான தீர்வும் கிடைக்கும்' என்று சொல்லப்படுவதுண்டு. அதன்படி, பருவநிலை மாற்றப் பாதிப்புகளைச் சமாளிக்கும் விதமாகத் தற்போது பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

ஒரு பக்கம், ரசாயன உரங்களைப் பயன்படுத்தியதால் மண் வளம் சீரழிந்துள்ள நிலையில், இன்னொரு பக்கம், பருவநிலை மாற்றங்களால் உலகின் பல இடங்களில் பருவம் தப்பி மழை பெய்கிறது. அதற்குத் தமிழகமும் சாட்சியமாக இருந்துவருகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் பருவ நிலை மாற்றத்தின் பல்வேறு பின்விளைவுகளான மழைப்பொழிவில் மாறுபாடு, நிலத்தடி நீர்வளம் குறைதல் போன்றவை நாடு முழுக்க எப்படிப்பட்ட பாதிப்புகளை

ஏற்படுத்தியுள்ளன என்பதை இரண்டு ஆண்டுகள் ஆய்வு செய்து 'பருவ நிலை மாற்றப் பாதிப்பு வரைபடம்' ஒன்றை, 'மானாவாரி விவசாயத்துக்கான மத்திய ஆராய்ச்சி நிறுவனம்' 2013-ம் ஆண்டு வெளியிட்டது.

**இயற்கைத் தீர்வு**

அதில் தேசிய அளவில் பருவநிலை மாற்றத்தால் அதிகப் பாதிப்புக்கு உள்ளாகிற மாவட்டமாக, தமிழகத்தைச் சேர்ந்த பெரம்பலூர் மாவட்டம் 28-வது இடத்தில் இருந்தது. ஆனால், மாநில அளவில் அதுதான் முதலிடத்தில் இருந்தது.

இதற்குத் தீர்வாகப் பெரம்பலூர் மாவட்டம் தேர்வு செய்த வழி 'இயற்கை வேளாண்மை'. கடந்த மூன்று மாதங்களாக, சென்னையைச் சேர்ந்த 'பாமர ஆட்சியியல் கூடம்' எனும் அமைப்பு பெரம்பலூரில் இயற்கைவழி வேளாண்மையில் நாட்டுப் பருத்தி மற்றும் சிறுதானியங்களை விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

நாட்டுப் பருத்தியும் வரகும்

இதுகுறித்து அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் க. சரவணன் பகிர்ந்துகொண்ட தகவல்கள்:

"தமிழக அரசின் திட்ட ஆணையம் சுகாதாரம், கல்வி, வறட்சி, தொழில்மயமாக்கம், வறுமை ஆகிய 5 காரணங்களின் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தின் வேப்பூர் ஒன்றியத்தை, மிகவும் பின் தங்கிய ஒன்றியமாக அறிவித்திருந்தது.

அந்த ஒன்றியத்தில் என்னென்ன வகையான பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன, விதைப்பு முறை, அதற்கான காரணங்கள், அங்கு விளைச்சலை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து ஆய்வு நடத்தி, அங்கே இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கலாம் என்று முடிவு செய்தோம்.

அதன்படி, வேப்பூர் ஒன்றிய மக்களிடையே ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, 20 தன்னார்வ விவசாயிகளைத் தேர்வு செய்தோம். அவர்களில்

சிலர் நாட்டுப் பருத்தியையும், தற்போது ஆடிப்பட்டம் என்பதால் சிலர் சிறுதானியமான வரகையும் விதைத்துள்ளனர். இன்னும் சிலர் சாமை, துவரை, இருங்கு சோளம், மாப்பிள்ளை சம்பா போன்றவற்றையும் விதைத்துள்ளனர். சுமார் 21 ஏக்கர் பரப்பளவில் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

**பருவநிலை போர்**

இந்தப் பகுதி முழுக்க மானாவாரி விவசாயம்தான் நடைபெறுகிறது. எனவே, குறைந்த அளவு தண்ணீரே தேவைப்படும் சிறுதானியங்களைச் சாகுபடி செய்யலாம். மேலும், சிறுதானியங்களை விளைவிக்க அடி உரம் மட்டும் போதும். இதர உரங்களோ, பூச்சிக்கொல்லிகளோ அல்லது சிறப்பு பராமரிப்போ தேவையில்லை. இதனால் விவசாயிகளுக்குச் சாகுபடிச் செலவு குறையும்.

எங்களுடைய முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் மன்றத்தின் வளர்ச்சித் திட்டமும், தர்மபுரி சிட்டிலிங்கி பகுதியைச் சேர்ந்த ‘இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பும்', பொள்ளாச்சியில் இயற்கை வேளாண்மை மூலமாகப் பருத்தி விளைவிக்கும் மணி சின்னசாமி போன்றவர்களும், திருவண்ணாமலையில் உள்ள தமிழக அரசின் ‘சிறுதானிய மகத்துவ மையம்' போன்ற அமைப்புகள் பயிற்சி வழங்குதல், உயர் ரக விதை வழங்குதல் எனப் பல விதங்களில் உதவி செய்துள்ளன.

இந்த முயற்சி வெற்றியடையும்பட்சத்தில், இதுபோன்ற வழிமுறைகளை மற்ற மாவட்டங்களிலும் பின்பற்றலாம்" என்றார்.

பருவநிலை மாற்றத்துக்கு ஏற்பப் பயிர் செய்தால்தான், இனி விவசாயம் தழைக்கும் என்று பருவநிலை ஆராய்ச்சி விஞ்ஞானிகள் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றனர். இதைப் பின்பற்றி எல்லா மக்களும் விழித்துக்கொண்டால், விவசாயம் தழைக்கும்!

**மத்திய அறிக்கை**

இயற்கை வேளாண்மைக்கு ஆதரவாக அரசு சார்ந்த முயற்சிகள் பெருகி வருகின்றன. ‘தற்போதிருக்கும் விவசாயப் பிரச்சினைகள், விஷத்தன்மை

கொண்ட உணவுகள், நிலத்தடி நீர் குறைதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், நாம் உடனடியாக இயற்கை வேளாண்மைக்குத் திரும்ப வேண்டும்' என்று நாடாளுமன்ற நிலைக் குழு தாக்கல் செய்துள்ள அறிக்கை, இந்த வகையைச் சேர்ந்ததுதான்.

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி தலைமையிலான இந்தக் குழு, "ரசாயனப் பயன்பாடு சார்ந்த விவசாயத்தின் பின்விளைவுகளில் இருந்து நாம் விடுபடுவதற்கு, இயற்கை வேளாண்மை சார்ந்த கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும்," என்று மத்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் ஆகிய ரசாயனம் சார்ந்த பொருட்களின் அளவு மண்ணில் 4:2:1 என்கிற விகிதத்தில்தான் இருக்க வேண்டும். ஆனால், இன்றைக்குத் தேசிய அளவில் இந்த ரசாயனங்களின் சராசரி விகிதம் மண்ணில் 7:3:1 ஆக உள்ளது. இதனால் விளைச்சல் குறைந்திருப்பதுடன், மண்வளமும் கெட்டுப் போயிருக்கிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

விகடன்

**75 ஆயிரம் டன் பருப்பு பறிமுதல்: மத்திய அரசு பரபரப்பு தகவல்!**

**புதுடெல்லி:** நாடு முழுவதும் மத்திய அரசு நடத்திய பருப்பு பதுக்கல் வேட்டையில் இதுவரை 75 ஆயிரம் டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.நாட்டில், துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளின் விலை கடுமையாக உயர்ந்ததை தொடர்ந்து, விலையை கட்டுக்குள் கொண்டுவர மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து உள்ளது. வெளிநாடுகளில் இருந்து கூடுதலாகத் துவரம் பருப்பு இறக்குமதி செய்யவும் மத்திய அரசு

அனுமதியளித்துள்ளது.

மேலும் பதுக்கி வைக்கப்பட்டு உள்ள பருப்பு மூட்டைகளை வெளிக்கொண்டுவர பறக்கும் படை அமைக்கப்பட்டு நாடு முழுவதும் அதிரடி சோதனை நடத்தப்படுகிறது. பதுக்கல் வேட்டையில் ஏற்கெனவே 36 ஆயிரம் டன் துவரம் பருப்பு பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், மஹராஷ்டிரா , கர்நாடகம், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் நேற்று முன்தினம் மேலும் 15 ஆயிரம் டன் துவரம் பருப்பு மூட்டைகள் சிக்கின.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

" மில் அரைவையாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லரை வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பருப்பு வகைகளை நியாயமான விலைக்கு விற்கும்படி கூறுமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டு உள்ளது. பதுக்கி வைக்கப்பட்டுள்ள பருப்பு மூட்டைகளை வெளிக்கொண்டுவரும் நடவடிக்கையும் முடுக்கிவிடப்பட்டுள்ளது.இதுவரை நடத்தப்பட்ட 6 ஆயிரத்து 77 பதுக்கல் வேட்டையில் 13 மாநிலங்களில் 74,846.35 டன் பருப்பு மூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. இதில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 46,397 டன்னும், கர்நாடகத்தில் 8,755.34 டன்னும், பீகாரில் 4,933.89 டன்னும், சத்தீஷ்காரில் 4,530.39 டன்னும், தெலுங்கானாவில் 2,546 டன்னும், மத்திய பிரதேசத்தில் 2,295 டன்னும், ராஜஸ்தானில் 2,222 டன்னும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.